பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விழியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | புரட்டாதி 16 வெள்ளிக்கிழமை 04.10.2019 | கதிர் 333

**இனி அது ரகசியம் அல்ல!**

நேற்று இப்பத்தியில் கூறியபடி இன்றும் – இப்போதும் – கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான – அவரது இலங்கைக் குடியுரிமைச் சான்றிதழுக்கு எதிரான – வழக்கு விசாரணையே கொழும்பிலும் நாட்டின் பிற இடங்களிலும் பிரதான பேசு பொருளாக பக்கம் 02 »

# மாற்று வேட்பாளரை இறக்கும் கட்டாயத்தில் மொட்டுக் கட்சி

## மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவு இன்று எப்படி அமைந்தாலும் அதுதான் நிலைமை

கொழும்பு, ஒக்ரோபர் 04

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் இலங்கைக் குடியுரிமை தொடர்பான சர்ச்சையின் மீது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு தொடர்பான கட்டளை இன்று வெளியாகவுள்ள நிலையில், அந்தக் கட்டளை எப்படி அமைந்தாலும், மாற்று வேட்பாளர் ஒருவரைக் கட்டாயம் களம் இறக்க வேண்டிய நெருக்கடியில் அக்கட்சி இருப்பதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. பக்கம் 02 »

## மைத்திரியின் பிரதிநிதிகள் கோட்டாபயவுடன் சந்திப்பு

### கூட்டணி ஒப்பந்தம் விரைவில்

கொழும்பு, ஒக். 04

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் இரவு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுடன் நீண்ட சந்திப் பக்கம் 03 »

## திருமணத்துக்காகப் பதவி உயர்த்தப்பட்டார் யோஷித



கொழும்பு, ஒக். 04

இலங்கைக் கடற்படையில் மீண்டும் இணைத்துக் கொள்ளப்பட்ட யோஷித ராஜபக்ஷ, திருமணத்துக்காக லெப். கொமாண்டராகப் பதவி உயர்த் பக்கம் 03 »

## ஐ.தே.க. சம்மேளனத்தின் நேரடி ஒளிபரப்பு தடை!

### தேர்தல் ஆணைக்குழு அதிரடி

கொழும்பு, ஒக். 04

ஐக்கிய தேசியக் கட்சியின்சம்மேளனநிகழ்வை நேரடியாக ஒளிபரப்பிக் கொண்டிருந்த தேசிய தொலைக்காட்சியான ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குச் சென்ற தேர்தல் ஆணைக்குழு அதிகாரி பக்கம் 02 »

## யாழ்.சர்வதேச விமான நிலையத்துக்கு அங்கீகாரம் வழங்கியது அமைச்சரவை

கொழும்பு, ஒக். 04

பலாலி விமான நிலையம் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையமாக (Jaffna International Airport) பெயரிடப்பட்டுள்ளது. இதற்கான அங்கீகா பக்கம் 02 »



## அத்தியாவசிய சேவையாக ரயில் சேவை பிரகடனம்!





கொழும்பு, ஒக். 04

ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக மாற்றுவது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையெழுத்திட்டுள்ளார். பக்கம் 02 »

## ஜனாதிபதி வேட்பாளராக ஒருவரை தமிழ் மக்கள் களமிறக்கவேண்டும்

### ஒன்றுபட அழைக்கிறார் சிவாஜிலிங்கம்



யாழ்ப்பாணம், ஒக். 04

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் ஜனாதிபதி வேட்பாளரைக் களமிறக்கத் தமிழ்க் கட்சிகள் தயாராகவேண்டும் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் பக்கம் 03 »

## ஜனாதிபதியானால் நான் சம்பளம் பெறமாட்டேன்!

### சஜித் அதிரடி அறிவிப்பு



கொழும்பு, ஒக். 04

ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டால், தனது சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைப் பெறமாட்டேன் என்றும் அவை அனைத்தையும் மக்களுக்காகத் தியாகம் பக்கம் 03 »

## சு.க. அமைப்பாளர்களின் அவசரக் கூட்டம் இன்று

கொழும்பு, ஒக். 04

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களின் அவசரக் கூட்டமொன்று இன்று அதன் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இன்று நண்பகல் 12 மணிக்கு பக்கம் 02 »

## தமிழ்ப் பொது வேட்பாளர் யோசனையை பரிசீலிப்பதற்கு விக்னேஸ்வரன் இணக்கம்

### ரெலோவை தனியாகச் சந்திக்கும் பேரவையின் முயற்சி தோல்வி



யாழ்ப்பாணம், ஒக். 04

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் பொதுவான தீர்மானத்தை வெளிப்படுத்தும் நோக்கில் பொது பக்கம் 03 »

## 40 இலங்கை மீனவர் தமிழகத்தில் கைது!

சென்னை, ஒக். 04

தமிழக – நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்கரை அருகே, வங்க கடலில், இந்திய எல்லைப் பகுதியில் மீன்பிடித்து கொண் பக்கம் 02 »

## ஜனாதிபதித் தேர்தலுக்கு எதிராக நேற்று உயர்நீதிமன்றத்தில் மனு!

கொழும்பு, ஒக். 04

ஜனாதிபதித் தேர்தலை அறிவிக்கும் அதிசிறப்பு வர்த்தமானி வெளியீடு சட்டரீதியற்றது எனக் கட்டளையிடக் கோரி உயர் நீதிமன்றில் உறுதிகேள் நீதிப்பேராணை மனு ஒன்று பக்கம் 02 »

## தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து ஒருமித்த முடிவெடுப்பதால் நன்மையே!

### அதனை வரவேற்பதாகக் கூறுகிறார் சிவஞானம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 04

ஜனாதிபதித் தேர்தல் குறித்து தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து பேசி ஒருமித்த முடிவை எடுக்கவேண்டுமென்பது நல்லதொரு செயற்பாடாகும். அதற்காகக் கட்சிகளுடன் பேசுவதும் சிறந்தது. அவ்வாறு ஒருமித்த பக்கம் 03 »



# சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் இன்று 'கார்டினர் புளொக்' திறப்பு நிகழ்வு!

## ஆயர் தலைமையில் நடக்கிறது



யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 'கார்டினர் புளொக்' கட்டடம் இன்று காலை 9 மணிக்கு 'சிலோன் ஹோட்டல் கோர்பரேஷன்' தனியார் நிறுவனத்தின் உரிமையாளரும் தலைவருமான ஈ.சஞ்ஜீவ் கார்டினரால் திறந்து வைக்கப்படவுள்ளது.

கல்லூரியின் முகாமையாளரும் யாழ் ஆயருமான மேதகு கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ் மேயர் இமானுவல் ஆனல்ட், வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன், 'சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் நிதி'யத்தின் செயலாளர் லக்ஷ்மன் சமரசிங்க, யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா, யாழ் பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன், யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் வைத்தியர் எஸ்.இராஜேந்திரா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

## யாழ். சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது.

தென்னிந்தியாவில் இருந்து இதற்கான முதலாவது சேவை எதிர்வரும் 15 ஆம் திகதியளவில் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து சர்வதேச விமானங்களை இயக்குவதற்கு, அனுமதி அளித்துள்ள சர்வதேச வான் போக்குவரத்துச் சங்கம், தனித்துவமான குறியீட்டான JAF என்பதையும் வழங்கியுள்ளது. (ஐ)

## ஐ.தே.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் அந்த ஒளிபரப்பை இடைநிறுத்த உத்தரவிட்டனர்.

இவ்வாறு நேரடி ஒளிபரப்பைச் செய்வதற்குத் தேசிய தொலைக்காட்சிக்கு ஐக்கிய தேசியக் கட்சியினால் கட்டணம் எதுவும் செலுத்தப்பட்டதா என்று வினவியபோதும் அப்படி எதுவும் செலுத்தப்படவில்லை என்பதைக் கண்டறிந்த பின்னர் இந்த ஒளிபரப்பை நிறுத்தத் தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகள் உத்தரவிட்டனர் என அறியமுடிந்தது.

இதனால் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் சம்மேளனத்தில் உரையாற்றிக்கொண்டிருந்த சமயம் தேசிய தொலைக்காட்சி தனது நேரடி ஒளிபரப்பை இடைநிறுத்தியது. (ஐ)

## அத்தியாவசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரயில்வே ஊழியர்கள் தொடர்ச்சியாக 8ஆவது நாளாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளமையால் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அதனால் பொதுப் போக்குவரத்தில் பயன்படுத்தும் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த வர்த்தமானி அறிவிப்பின் படி பயணிகள் மற்றும் சரக்குகள் உள்ளிட்ட அனைத்து பொதுப் போக்குவரத்து சேவைகளுக்குமான ரயில் சேவை மற்றும் அது தொடர்பான ரயில் பாதை பராமரிப்பு, முறையான பாதுகாப்பு வழங்குவது தொடர்பான சமிக்ஞை தொகுதிகள், செயற்பாடுகள், பயணச்சீட்டுகள் உள்ளிட்ட ரயில்வே திணைக்களத்தினால் மேற்கொள்ள வேண்டிய அனைத்து சேவைகளும் உள்ளடங்கும் வகையில் அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர் வரும் நவம்பர் 16ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான வர்த்தமானி அறிவிப்பைத் தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த 18ஆம் திகதி வெளியிட்டது.

அரசமைப்பின் 104ஆவது, உறுப்புரையோடு சேர்த்து வாசிக்கப்படும், 1981 ஆம் ஆண்டின் 15 ஆம், இலக்க ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவு என்பவற்றால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு,

1. 2019, ஒக்ரோபர் மாதம் 07 ஆம் திகதி, ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர்களைப் பெயர் குறித்து நியமிப்பதற்கான நாளாகவும்,

2. தேர்தல்கள் செயலகம், சரண மாவத்தை, இராஜகிரிய – இதனை தேர்தலுக்கான வேட்பாளர்களைப் பெயர் குறித்து நியமிப்பதற்கான இடமாகவும்,

3. 2019, நவம்பர் மாதம் 16 ஆம் திகதியை அத்தகைய தேர்தலுக்கான வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டிய நாளாகவும், இக்கட்டளை மூலம் நிர்ணயிக்கிறோம் என்று கூறப்பட்டிருந்தது.

இதில், தேர்தல் ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களும் ஒப்பமிட்டனர்.

இந்த நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட இந்த வர்த்தமானி அறிவிப்பை வெற்றும் வெறிதானதுமாக கட்டளையிடுமாறு கோரி நேற்று உயர்நீதிமன்றில் நீதிப்பேராணை மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் காலி மாநகரின் முன்னாள் முதல்வர் என்.ஜி. மீத் சிறிடி சில்வா மனுதாரராகக் குறிப்பிடப்பட்டுள்ளமையுடன், எதிர்மனுதாரராகத் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்ட போது, அவருக்கு 6 ஆண்டுகள் பதவிகாலம் நிர்ணயிக்கப்பட்ட நிலையில் 4 ஆண்டுகள் நிறைவில் தேர்தலை நடத்த முடியாது என்று மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நிர்ணயிக்கப்பட்ட நவம்பர் 16ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு வழங்குமாறும் மனுதாரர் மனுவில் கோரியுள்ளார்.

இந்த மனுவை இன்று வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்குமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளது. (ஐ)

## மாற்றுவேட்பாளரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் வேட்பாளராக அல்லது சுயேச்சை வேட்பாளராக ஒருவரைக் களம் இறக்கும் கட்டாயத்தில் உள்ள பொதுஜன பெரமுன பெரும்பாலும் சமல் ராஜபக்ஷவை மாற்று வேட்பாளராக நிறுத்தும் முன்னாயத்தத்தில் இருப்பதாகத் தெரிகின்றது.

கோட்டாபயவின் குடியுரிமை சர்ச்சை தொடர்பில் அவரைப் பாதிக்கும் விதத்தில் இடைக்கால உத்தரவு எதனையும் வெளியிட மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று மறுத்து விட்டால், திங்களன்று கட்சியின் வேட்பாளராக கோட்டாபய தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்வார்.

எனினும், அத்தகைய மேன்முறையீட்டு நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக மனுதாரர் பின்னர் உயர்நீதிமன்றுக்குச் சென்று மேன்முறையீடு செய்யவும் –

அத்தகைய மேன்முறையீட்டின் மீது கோட்டாவின் இலங்கைக் குடியுரிமைச் சான்றிதழுக்கு எதிராக உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதிக்கவும் வாய்ப்புகள் – சாத்தியங்கள் – இருக்கின்றன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. அத்தகைய வலிதான காரணங்கள் இந்த வழக்கில் தாராளமாக இருக்கின்றன எனவும் சட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வேட்புமனுத் தாக்கலுக்கும் வாக்களிப்புக்கும் இடையில் உயர்நீதிமன்றம் அவ்வாறான இடைக்காலத் தடை எதனையாவது விதிக்குமானால், இந்தத் தேர்தலில் பொதுஜன பெரமுன சார்பான வேட்பாளர் இல்லாமல் போகும் ஆபத்து ஏற்படும் எனவும் கூறப்படுகின்றது.

இத்தகைய நெருக்கடி ஏற்பட்டால் அதனைச் சமாளிப்பதற்காக கோட்டாபயவுக்கு மாற்றாக – மேலதிகமாக – ஒருவரை சுயேச்சையாகக் களம் இறக்கிக் கைகாவலுக்கு வைத்துக் கொள்வது, தப்பித் தவறி கோட்டாபயவுக்கு எதிராக வாக்களிப்புக்கு முன்னர் உயர்நீதிமன்றில் இடைக்கால உத்தரவு ஏதும் வந்து, அவர் தேர்தலில் இருந்து விலக்கப்பட்டால், அந்த இடத்துக்கு சுயேச்சையாக நிற்கும் மாற்று வேட்பாளரைத் தங்கள் வேட்பாளராக அறிவித்து தேர்தல் போட்டியில் தொடர்வது என பொதுஜன பெரமுன யோசிப்பதாகவும் கூறப்பட்டது.

அவ்வாறு இல்லாமல் –

கோட்டாபய போட்டியிடுவதற்கு எதிராக இன்றே மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால உத்தரவு எதையும் வழங்கிவிட்டால், கோட்டாபயவை நிறுத்தி விட்டு மாற்று வேட்பாளரையே – அது பெரும்பாலும் சமல் ராஜபக்ஷவாக இருப்பார், அவரையே – வேட்பாளராக உடன் களமிறக்குவது என்றும் பொது ஜன பெரமுன தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த இரண்டு சாத்தியங்களின் அடிப்படையில் ஒரு மாற்று வேட்பாளரை – அது பெரும்பாலும் சமல் ராஜபக்ஷவாக இருப்பார். அவரை – தயாராக வைத்திருக்கின்றது பொதுஜன பெரமுன என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## 40 இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிருந்த 40 இலங்கை மீனவர்களை இந்தியக் கடற்படை கைது செய்தது. மீனவர்களின் 8 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

இவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர் எனக் கூறப்பட்டது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றது.

வழக்கின் பென்டுலம் (ஊசல்) நேற்று கோட்டாவுக்கு எதிர்த்திசையில் இருந்ததாக நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்த சட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று பிற்பகல் 1.30 மணி முதல் மாலை 6.15 மணி வரை வழக்கு விசாரணை நடைபெற்றது. இன்று மிச்சத் திருவிழா தொடரும். பெரும்பாலும் இன்று மாலையில் முடிவு வரும் என எதிர்பார்க்கலாம்.

நேற்று உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபேகுணவர்த்தனசார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சானக டி சில்வா முன்னிலையாகி வாதிட்டார்.

இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும் அதிகாரம் சட்டப்படி உள்நாட்டலுவல்கள் அமைச்சருக்கே உள்ளது என்று வாதங்களை முன்வைத்த அவர், அமைச்சரவை இல்லாத சமயத்தில் அந்த அமைச்சரின் அதிகாரத்தை ஜனாதிபதி தாமே பிரயோகிக்கலாம் என்ற வாதம் சட்ட ரீதியாகத் தவறானது என்பதை விளக்கினார்.

இவ்விடயத்தில் ஜனாதிபதிக்கு முழுமையான பிரத்தியேக அதிகாரம் (Plenary Powers) இருப்பதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறு என்று குறுப்பிட்ட அவர், அதனை ஊர்ஜிதப்படுத்துமாற்போல உயர்நீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய இரண்டு வழிகாட்டல் தீர்ப்புகளையும் ஆதாரமாக முன் வைத்தார்.

இன்று வழங்கப்படும் இடைக்கால உத்தரவில் கோட்டாபய ராஜபக்ஷ தப்பிப் பிழைத்தால் கூட –

அவ்வாறான உத்தரவுக்கு எதிராக விரைந்து உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யவும், அந்த மேன்முறையீட்டின் மூலம் வேட்புமனுத் தாக்கலுக்கும் வாக்களிப்புக்கும் இடையில், கோட்டாபயவின் வேட்புமனுவை இடைநிறுத்தக் கூடிய தடை உத்தரவை உயர்நீதிமன்றத்திடம் பெறவும் கூடிய சட்ட வாய்ப்புகள் அதிகமாக உள்ளன என்று சம்பந்தப்பட்ட சட்டவட்டாரங்கள் உறுதியாகத் தெரிவித்தன.

அதனால்தான், இன்றைய கண்டத்தில் தப்பினால் கூட, வாக்களிப்புக்கு இடையில் கோட்டாவை இடறி வீழ்த்த வாய்பிருக்கும் நிலைமை உணர்ந்து, மாற்று வேட்பாளர் ஒருவரை சுயாதீனமாக நிறுத்தும் முழு முயற்சியில் பொதுஜன பெரமுன தீவிரமாக இருப்பதாக அறியமுடிகின்றது.

சரி. இவை ஒருபுறமிருக்கட்டும். சரியாக நாள் கணக்குகள் எண்ணி, கனகச்சிதமாகத் திகதி பார்த்து, வேட்புமனு ஏற்கவிருக்கும் சமயத்தில் இப்படிக் கழுத்தில் விழக் கூடியதாக கோட்டாபயவுக்கு எதிராக சட்ட சுருக்கு வீசப்பட்டிருப்பதன் பின்னணி – சூத்திரதாரி – யார் என்று தேடிப்பார்த்தேன்.

சுட்டு விரல் நம் தமிழ்ச் சட்டத்தரணி பக்கத்தில் வந்து நிற்பதைத்தான் கண்டறியமுடிந்தது.

கோட்டாபயவுக்கு சட்டச் சுருக்குக் கயிறை வீசும் இந்த வழக்கில் வழக்காளிகள் சார்பில் முன்னிலையாகின்றவர் சிரேஷ்ட சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ.

முன்னாள் வடக்கு முதல்வர் சி.வீ.விக்னேஸ்வரனுக்கு எதிராக முன்னாள் மாகாண அமைச்சர் டெனீஸ்வரன் தாக்கல் செய்ய வழக்கில் டெனீஸ்வரன் சார்பில் முன்னிலையாகி வாதிட்டு, விக்னேஸ்வரனுக்கு எதிரான தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பெற்றவர் இந்தச் சட்டத்தரணிதான்.

அந்த வழக்கிற்கும் ஜனாதிபதி சட்டத்தரணிஎம்.ஏ.சுமந்திரனுக்கும் உள்ள தொடர்புகள் அரசல் புரசலாகப் பேசப்பட்டவைதான். வாசகர்களாகிய உங்களுக்கும் தெரிந்தவைதான் அவை.

இப்போது கோட்டாபயவுக்கு எதிரான வழக்கில் சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோவின் நேரடி உதவியாளர் யார் தெரியுமா?

சட்டத்துறை நடவடிக்கைகளில் சுமந்திரனின் வலதுகை உதவியாளராக விளங்கும் சட்டத்தரணி நிரான் அங்கிட்டல்தான் அவர்.

அப்படியானால், இந்த வழக்கின் சட்ட மூளை எங்குள்ளது என்பதை நான் கூறத்தேவையில்லை. வாசகர்களே ஊகித்துக் கொள்வார்கள்.

கோட்டாவுக்கு எதிரான இந்த வழக்கின் போக்கு எத்திசையில் உள்ளது என்பதை அறிவதற்கு – அது எப்படி முடியும் என்பதை தெரிந்து கொள்வதற்கு – ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உதவியாளர்கள் கூட சுமந்திரனுடன்தான் அடிக்கடி தொடர்பு கொள்கின்றார்கள் என்றும் ஓர் உறுதியான தகவல் உண்டு.

சுமந்திரன் தரப்பில் இருந்து கிடைத்த ஊக முடிவை அடுத்து, திடீரென இந்தத் தேர்தலில் சு.க. வேட்பாளராகத் தாம் குதித்தால் என்ன என்ற எண்ணம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வந்துள்ளது என்றும் கூட ஒரு செய்தி நேற்றிரவு கிடைத்தது.

நான் ஏற்கனவே இப்பத்தியில் குறிப்பிட்டமை போல 'சைக்கிள் Gap இல் ஓட்டோ ஓட்டும் தந்திரம்' போலும் மைத்திரியின் இந்த முயற்சி.

ஓரிஜினலாக கோட்டாவுக்கு எதிரான இந்த வழக்கை, அவர் ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர் தொடுத்து, தேர்தலிலிருந்து அவரை இடையில் அகற்றுவதுதான் வழக்குத் தொடுநர்களின் எண்ணமாக இருந்தது.

ஆனால், அப்படிச் செய்தால் வழக்குத் தொடுநர்களின் நோக்கம் அரசியல் ரீதியானது மட்டுமே என்று கருதி அந்த வழக்கை நீதிமன்றம் நிராகரித்து விட வாய்ப்புண்டு என்பதைச் சுட்டிக்காட்டி, ஆகவே நேரத்துடனேயே – வேட்புமனுவுக்கு மட்டுமட்டான தினத்தில் வழக்கு கோட்டாவின் கழுத்துக்கு வந்து இறுக்கக்கூடியதாக அதைத் தாக்கல் செய்வதற்கு வழிப்படுத்தியவரும் கூட நமது தமிழ் சட்டத்தரணிதான் என்று அறிய வந்தது.

இது அவரது Professional Ethics சம்பந்தப்பட்ட விடயம். நாம் அது தொடர்பில் அதிகம் பேசுவதும் – அது மீறி அம்பலப் படுத்துவதும் கூட – நமக்கு எதிராகவும் சட்டத்தைப் பாய வைக்க வழி செய்து விடும். அதனால் மேலும் பல விடயங்கள் – விவரங்கள் – தெரிந்திருந்தாலும் கூட இத்துடன் அதை நிறுத்திக் கொள்வோம்.

வழக்கின் பெறுபேறு பெரும்பாலும் இன்று மாலை ஓரளவுக்கு தெளிவாகிவிடும் என்று நம்புகின்றேன். அதன் பின் இது பற்றிப் பேசுவோமே...!

- மின்னல் -

## சு.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கூட்டம் ஜனாதிபதி மாளிகையில் நடக்கவுள்ளது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி – ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுவுடன் அரசியல் கூட்டணி அமைக்க பேச்சுக்களை நடத்திவரும் நிலையில் அது குறித்து இறுதி முடிவு இந்த அமைப்பாளர்களுடன் பேசிய பின்னர் எடுக்கப்படுமென சுதந்திரக் கட்சியின் தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## தமிழ்ப் பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேட்பாளராக தமிழர் ஒருவரை முன்னிறுத்தும் யோசனையைப் பரிசீலிப்பதாக தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் பொதுவான தீர்மானத்தை எட்டும் வகையில் தமிழ் மக்கள் பேரவையினால் சமயத் தலைவர்கள், கற்றறிந்தவர்கள், அரசியல் ஆய்வாளர்கள், புலமைசார் வல்லுநர்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்ட சுயாதீனக் குழு தமிழ் அரசியல் கட்சிகளைச் சந்திக்கும் பணியை நேற்று தினம் முன் ஆரம்பித்தது.

இந்தச் சுயாதீன குழுவில் யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா, திருகோணமலை மறை மாவட்ட ஆயர் அதிமேதகு பொன்னையா ஜோசப் ஆண்டகை, தென்கயிலை ஆதீன சுவாமிகள் தவத்திரு அகத்தியர் அடிகளார், யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளார், சமூக மற்றும் அரசியல் ஆய்வாளர் சட்டத்தரணி சி.அ.ஜோதிலிங்கம், யாழ். பல்கலைக்கழகம் அரசறிவியற்றுறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி கு.குருபரன், யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர் சிவபாலன், யாழ். பல்கலைக்கழகம் சட்டத்துறை விரிவுரையாளர் திருமதி. கோசலை மதன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், மட்டக்களப்பு சமூகச் செயற்பாட்டாளர் குருநாதன், திருகோணமலை சமூகச் செயற்பாட்டாளர் கஜன் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் பொதுவான தீர்மானத்தை வெளிப்படுத்தும் நோக்கில் பொது வேட்பாளராக தமிழர் ஒருவரை முன்னிறுத்துவது தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகள் ஒருமித்த முடிவை எடுக்கும் வகையில் மேற்படி சுயாதீன குழுவின் அங்கத்தவர்கள் நேற்று முன் தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனைக் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச்சந்திப்பு சுமார் மூன்று மணித்தியாலங்கள் நீடித்தது. இதன்போது தமிழ் மக்கள் பேரவையின் யோசனை தொடர்பில் சிந்திப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் தெரிவித்தார்.

தொடர்ந்து நேற்று முன் தினம் மாலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் சந்திப்பும் இடம்பெற்றது. இச்சந்திப்பில் கட்சியின் செயலாளர் செ.கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன், சட்டத்தரணி சுகாஷ் ஆகியோரும் உடன் இருந்தனர்.

இந்தச் சந்திப்புக்கள் இரண்டும் சுமுகமாக இடம் பெற்றன என்று தமிழ் மக்கள் பேரவை அறிக்கை வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்றுத் தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்தது.

பொது வேட்பாளர் ஒருவரை நியமிப்பதன் சாத்தியப்பாடுகள் தொடர்பில் தனக்கு நம்பிக்கையில்லை என்று சுட்டிக்காட்டிய நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், அவ்வாறு பொது வேட்பாளரை முன்னிறுத்துவதானாலும் காலம் போதாது என்று சுட்டிக்காட்டினார்.

பொது வேட்பாளரை முன்னிறுத்துவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் நிலைப்பாடு தொடர்பில் விக்னேஸ்வரனுக்கு குழுவினரால் எடுத்துக் கூறப்பட்டது.

இந்த யோசனை தொடர்பில் தான் பரிசீலிப்பதாக நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தனை மட்டுமே சந்திப்போம் என்று தமிழ் மக்கள் பேரவையின் குழுவால் தெரிவிக்கப்பட்ட நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் நால்வரை குழு சந்தித்திருந்தமை குறித்து கூட்டமைப்பினர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

மேலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவுடன் தனியாகச் சந்திப்பதற்காக அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கு தொலைபேசியில் தொடர்பை இந்தக் குழு ஏற்படுத்தியுள்ளது. எனினும் அவர் பதிலளிக்காமல் தவிர்த்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனையும் தமிழ் மக்கள் பேரவையின் சுயாதீனக் குழு நேற்றிரவு சந்தித்தது.

## திருமணத்துக்காகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தப்பட்டுள்ளார்.

சி.எஸ்.என். தொலைக்காட்சி நிதி முறைகேடு குற்றச்சாட்டை அடுத்து, கடற்படையில் இருந்து – கடந்த 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி தொடக்கம், லெப். யோஷித ராஜபக்ஷ இடைநிறுத்தப்பட்டிருந்தார்.

இந்தநிலையில் அண்மையில் கோட்டாபய ராஜபக்ஷவுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடத்திய சந்திப்பை அடுத்து, பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட அதே நாளில் இருந்து லெப். யோஷித ராஜபக்ஷவை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ள கடற்படைத் தளபதிக்கு உத்தரவிடப்பட்டது.

இதற்கமைய அவரை மீண்டும் கடற்படையில் சேர்த்துக் கொள்ளும் ஆணையில் கடந்த 24ஆம் திகதி கடற்படைத் தளபதி கையெழுத்திட்டார்.

லெப்.யோஷித ராஜபக்ஷ தனது திருமணத்தில் கடற்படைச் சீருடையுடன் பங்கேற்க விரும்புவதால், அவரை மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளுமாறு கோட்டாபய ராஜபக்ஷ கோரியிருந்தார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில், யோஷித ராஜபக்ஷவின் திருமணம் நேற்று இடம்பெற்றது.

இதற்கு முன்னதாக யோஷித ராஜபக்ஷ நேற்று லெப்.கொமாண்டராக தற்காலிகமாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார் என கடற்படைப் பேச்சாளர் லெப்.கொமாண்டர் இசுறு சூரியபண்டார தெரிவித்திருந்தார்.

இவரது பதவி உயர்வுக்கு பாதுகாப்பு அமைச்சு அங்கீகாரம் அளித்துள்ளது என்றும், தகுதி காண் பரீட்சையில் சித்தி பெற்ற பின்னர் அவர் நிரந்தரமாக லெப். கொமாண்டராகத் தரமுயர்த்தப்படுவார் என்றும் அவர் கூறினார்.

திருமணத்தின் போது, லெப். கொமாண்டருக்கான பட்டியுடன் கூடிய கடற்படைச் சீருடையையே யோஷித ராஜபக்ஷ அணிந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரபல வர்த்தகர் ஆனந்த ஜயசேகரவின் புதல்வியான நிதீஷாவை கரம்பிடித்த யோஷித்தவின் திருமணம் கோல்பேஸ் ஹோட்டலில் நடந்தது.

அரசியல்வாதிகள் – இராஜதந்திரிகள் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ)

## தமிழ்க் கட்சிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முடிவெடுப்பது தமிழ் மக்களுக்கு நன்மையாகவே அமையுமெனத் தெரிவித்திருக்கும் இலங்கை தமிழரசுக்கட்சியின் மூத்த துணைத் தலைவர்களில் ஒருவரும் வடக்கு மாகாணசபையின் அவைத்தலைவருமான சி.வீ.கே. சிவஞானம், தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து நிதானமாக ஒருமித்த முடிவை எடுக்க வேண்டுமென்பதையும் வரவேற்றுள்ளார்.

கல்வியங்காட்டிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கேள்வி – ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நீங்கள் தெரிவித்த கருத்தையடுத்து அநாவசியமான கருத்துக்களைக் கூறவேண்டாமென உங்கள் கட்சி அறிவுறுத்தல் வழங்கியிருப்பதாகச் செய்தி வெளியாகியுள்ளதே?

பதில் – ஜனாதிபதித் தேர்தல் குறித்து நான் கதைக்கக்கூடாது அல்லது கதைக்கவேண்டாமெனத் தடை ஏதும் எனக்கு இல்லை. அவ்வாறு தடைவிதிக்கப்பட்டதாகக் கூறுவதைப்பற்றி எனக்குத் தெரியாது. அப்படி எந்தவிதமான அறிவித்தலும் எனக்கு கிடைக்கவில்லை.

தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவராக நான் இருக்கிறேன். அதனால் கட்சி குறித்து கருத்து தெரிவிக்கும் உரிமை எனக்கு இருக்கிறது. ஆகையினால் இப்போது மட்டுமல்ல எப்போதுமே எனது கருத்துச் சுதந்திரத்துக்கு கட்சி தடை ஏற்படுத்தியது இல்லை. தடை போட்டதும் இல்லை.

கேள்வி – தெற்கில் பல கட்சிகளும் தமது ஜனாதிபதி வேட்பாளர்கள் தொடர்பில் அறிவித்துள்ள நிலையில் தமிழ்த் தரப்புக்களுக்கு எழுத்து மூலமான உறுதிமொழி எதனையும் வழங்கப் போவதில்லை என பிரதான கட்சிகளின் வேட்பாளர்களான சஜித் மற்றும் கோட்டாபய ஆகியோர் கூறியுள்ளமை பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?

பதில் – இந்த விடயத்தில் கட்சித் தலைவர் சம்பந்தன் ஐயாவின் கருத்து தெளிவானது. அதனால் தான் நாங்கள் எந்த முடிவையும் எடுக்கும் முன்பு அவர்கள் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தையாவது வெளியிடட்டும் என்று பார்க்கின்றோம். அதன் பின்னர் நாங்கள் எங்கள் முடிவை அறிவிப்போம் என்று கூறியிருக்கின்றார். அதற்கமைய அவர்கள் தங்கள் நிலைப்பாடுகளைத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிட்ட பின்னர் நாங்கள் பரிசீலித்து ஒருமித்து முடிவை எடுப்போம்.

கேள்வி – எழுத்துமூலமான உறுதிமொழி தருவதையும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவதையும் சமனாகக் கருத முடியுமா? அதனால் ஏதும் நடைபெறுமா?

பதில்– தேர்தலில் போட்டியிடுகின்றவர்கள் தங்கள் நிலைப்பாடுகள் தொடர்பில் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுவது வழமை. ஆகையினால் அவர்கள் அதில் என்ன உள்ளடக்குகின்றனர் என்று பார்க்கலாம். அதில் நாங்கள் எதிர்பார்க்கின்ற விடயங்களும் இருக்கலாம். ஆகவே அப்படியானதாகத்தான் அமையுமென நான் நினைக்கிறேன்.

அந்தத் தேர்தல் விஞ்ஞாபனத்தை வைத்து அதன் பின்னர் நாம் அவர்களுடன் பேசி உடன்பாடுகள் ஏற்படுத்தலாமென்று கருதுகின்றேன். ஆக அவ்வாறு உடன்படும் விடயங்கள் எழுத்து மூலம் தரப்படலாமெனவும் நினைக்கிறேன்.

கேள்வி – கடந்த காலத்தில் தேர்தல் விஞ்ஞாபனத்தினூடாக வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்தும் அவை நிறைவேற்றப்படாமல் உள்ள நிலையில் மீண்டும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்படும் விடயங்களை வைத்து அதனை, வாக்குறுதிகளை நம்புவதை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

பதில் – அரசியலில் எல்லாக் கட்சிகளும் தேர்தல் விஞ்ஞானத்தில் முன்வைக்கும் விடயமே அதியுச்ச நிலைப்பாடாகப் பார்க்கப்படுகிறது. ஆனாலும் அதில் எல்லாவற்றையும் நிறைவேற்றுவதில்லை. ஆகவே அதில் எங்களுக்குச் சாதகமான விடயங்கள் ஏதும் நிறைவேற்றப்படாதவிடத்து அதை நிறைவேற்றுமாறு நாங்கள் வலியுறுத்தலாம். அத்தகைய வாய்ப்பை நாங்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

கேள்வி – ஜனாதிபதித் தேர்தல் தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிற நிலையில் யாழ்., கிளிநொச்சி உட்பட வடக்கில் திடீரென பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கின்றதை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

பதில் – திடிரென ஏன் இப்படி ஒரு ஏற்பாடு என்று எனக்கு தெரியவில்லை. இந்த இடத்தில் குறிப்பாக ஒரு விடயத்தைச் சொல்ல வேண்டும். அதாவது இத்தனை வருடமாக நடைபெற்ற தேர்தலில் வன்முறையில்லாத பிரதேசமாக வடக்கு மாகாணம் இருந்து வந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக எங்கள் கட்சி உட்பட யாழில் இருக்கும் கட்சிகள் பலவும் வன்முறைகளூடாகத் தேர்தலை எதிர்கொண்டவையாக இல்லை. ஆனபடியால் இவ்வாறான கட்டுப்பாடுகள் ஏன் என்று விளங்கவில்லை.

கேள்வி – ஜனாதிபதி தேர்தலொன்று அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒருமித்த முடிவை எடுக்க வேண்டுமெனச் சிவில் சமூகம் உட்பட பல தரப்பும் கோரிக்கை விடுத்து தொடர் சந்திப்புக்களை மேற்கொள்வதை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

பதில் – அந்த முயற்சி எந்தளவிற்குச் சாத்தியப்படுமென்று தெரியவில்லை. ஆனால் அந்த முயற்சி நல்லது. அதில் சாதகமான முடிவுகள் எட்டப்படுமாக இருந்தால் கட்சியாகக் கூடி ஒரு முடிவை எடுப்போம்.

கேள்வி – தொல்பொருள் அமைச்சராக சஜித் பிரேமதாஸ இருக்கிறார். அவர் அமைச்சராக இருக்கின்ற நிலையில்தான் தொல்பொருள்திணைக்களத்தால் தமிழ் மக்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான நிலைமைகள் இருக்கத்தக்கதாக தற்போது ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ அறிவிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் ஜனாதிபதியானால் இந்தச் செயற்பாடுகள் மீண்டும் தொடருமா அல்லது நிறுத்தப்படுமா?

பதில் – எமது கட்சி சஜித் பிரேமதாஸவுடன் பேசுகின்ற போது இந்த விடயங்கள் மிக முக்கியத்துவம் பெறுமென்று நான் நினைக்கிறேன். ஆகையினால் இது தொடர்பில் நாங்கள் பேசி ஒரு முடிவிற்கு வர வேண்டும்.

கேள்வி – ஜனாதிபதித் தேர்தலில் கோட்டா. சஜித் என பிரதான வேட்பாளர்கள் இருவர் இருக்கையில் கூட்டமைப்பு யாரை ஆதரிக்குமென நீங்கள் நினைக்கிறீர்கள்?

பதில் – இன்றைய நிலையில் இது தொடர்பான முடிவுகள் எவையும் எடுக்கப்படவில்லலை. இதில் பல தளம்பல் நிலைமைகள் இருக்கின்றன. பல கட்சிகளும் தமது வேட்பாளர்களை அறிவித்திருக்கின்றன. அவர்கள் ஒவ்வொருவரும் எத்தகைய நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கின்றனர் என்பது வெளிப்படுத்தப்படவில்லை. அதனால் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டிருந்தாலும் ஆதரவு என்ற விடயத்தில் ; உண்மையில் பல தளம்பல்கள் இருக்கின்றன.

குறிப்பாக அனுர குமார திசாநாயக்க, முன்னாள் இராணுவத் தளபதி உள்ளிட்ட பலர் வேட்பாளர்களாக இருக்கின்றனர். அவர்கள் பலரும் பலதையும் பேசுகின்றனர். அதனால் அனைவரதும் கருத்துக்கள் அல்லது நிலைப்பாடுகள் வெளிவந்த பின்னர் அவர்களுடன் பேசியே எமது முடிவை எடுக்க முடியும். ஆகையினால் யாருக்கு ஆதரவு என்பது குறித்து இப்ப எதிர்வு கூறுவது சாத்தியமில்லை. (ஐ-07)

## ஜனாதிபதி வேட்பாளராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தலில் வெற்றியடைந்த பின்னர் தமிழர்களைப் புறக்கணிப்பது பௌத்த பேரினவாதிகளுக்கு வாடிக்கையாகும்.

எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைக்கான தீர்வைப் பகிரங்கமாக எவரேனும் அறிவித்தால் அதனைப் பரிசீலிக்க முடியும்

அவ்வாறு இல்லாவிட்டால் தமிழ் மக்கள் சார்பிலும் ஜனாதிபதி வேட்பாளராக ஒருவரைக் களமிறக்கத் தயாராகவேண்டும்.

தமிழ்த் தேசியம் சார்ந்த அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமையாக ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு முன்வர வேண்டும் – என்றார். (ஐ-07)

## ஜனாதிபதியானால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்வேன் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அனைவருக்கும் முன்மாதிரியான தலைமைத்துவமொன்றை பெற்றுக் கொடுப்பதற்குத் தான் தயாராக உள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொன்றை நடத்தினர்.

சுதந்திரக்கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலர் மஹிந்த அமரவீர, நாடாளுமன்ற உறுப்பினர் லசந்த அழகியவண்ண ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி மைத்திரியின் விசேட தகவல் ஒன்றை அவர்கள் கோட்டாபயவிடம் முன்வைத்தனர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி–ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூட்டணி ஒப்பந்தத்துக்கான நகல் ஒன்றும் இதன்போது கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பையடுத்து கருத்து வெளியிட்ட ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் முக்கியஸ்தர் ஒருவர் ,இன்னும் சில தினங்களில் இருதரப்பு கூட்டணி ஒப்பந்தத்திற்கான இறுதிவரைவு பூர்த்தி செய்யப்படுமென்று குறிப்பிட்டார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## மதத் தலைவர்களும் அரசியலும்

மதத் தலைவர்களுக்கு 'அரசியல் மதம்' பிடித்ததின் விளைவை இந்த நாடுஅனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

மதத்தின் பேரால் மக்களை – சமூகத்தை – இனத்தை – ஐக்கியப்படுத்துவது, சமரசத்தை ஏற்படுத்துவது, இணக்கத்தை உருவாக்குவது என்பது வேறு. மதத் தலைமை என்ற முகமூடியோடு அரசியல் செய்வது வேறு.

சமூகத்துக்கு வழிகாட்ட வேண்டியவர்கள் தங்களை அரசியல் வழிகாட்டிகளாக மாற்ற முற்படுவர்களாயின் அதை வெளிப்படையாகவும், பட்டவர்த்தனமாகவும் செய்ய வேண்டும். அதுதான் சரியான முறைமை.

இப்போது தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் சுயாதீனக் குழு என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் முயற்சியில் நமது சுவாமிமார் தெரிந்தோ, தெரியாமலோ – தாங்கள் விரும்பியோ, விரும்பாமலோ – நேரடியாக அரசியல் செய்ய முற்பட்டிருக்கின்றார்கள் என்பதுபோல தோன்றுகின்றது. அதனைச் சுட்டிக்காட்டி அந்த விபரீதத்தை அவர்களுக்கும் புரிய வைப்பது நமது கடமை என்று நினைக்கிறோம்.

தமிழ் மக்கள் – இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்வதானால் தமிழ் பேசும் மக்கள் – பல விடயங்களில் பிரிந்து நின்று அரசியல் செய்வதும், முரண்பட்டு செயற்படுவதும் சமூகப் பாதிப்பான விடயம் என்பது உண்மையே.

அந்தப் பிளவு நிலையில் இருந்து அரசியல் ரீதியாவும், பிற அம்சங்கள் தொடர்பிலும் ஒன்றுபட்டு செயற்படுவது – ஐக்கியப்பட்டு காரியமாற்றுவது – அவசியமானதுதான். அதற்கான வழிப்படுத்தலை செய்ய வேண்டிய தார்மீகப் பொறுப்பும், கடமையும் அந்தச் சமூகத்தைச் சேர்ந்த மதத் தலைவர்களுக்கு உண்டு. அது ஒரு வகையில் கட்டாயக் கடப்பாடும் கூட.

அந்தப் பொறுப்பை நிறைவேற்ற – அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும், இன ரீதியாகவும் ஒன்றுபட்டு நில்லுங்கள் என்று வழிப்படுத்தும் செயற்பாட்டுக்காக – புறப்பட்டுவிட்டு, அதில் தாமும் சேர்ந்து அரசியல் செய்வதற்கு மதத் தலைவர்கள் முயல்வார்களாயின் அதைவிடப் பெரும் துரதிர்ஷ்டம் வேறில்லை.

அது, சேறு அகற்றப் போய் அதில் குளித்த கதைக்கு ஒப்பாகிவிடும்.

தமிழ் மக்கள் பேரவை அமைத்த சுயாதீனக் குழுவில் கல்விமான்கள், அறிவியல் ஜாம்பவான்கள், அரசியல் விமர்சர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் இடம்பெற்றிருக்கின்றார்கள்.

பல தரப்புகளையும் ஒன்றுபட வைக்கின்றோம் என்ற பெயரில் அரசியல் வழிகாட்டல்களிலும், அரசியல் செயற்பாடுகளுக்கான ஆலோசனைகளிலும் அவர்கள் ஈடுபடுவது வேறு. ஆனால், அவர்களுடன் அதே அணியில் மதத் தலைவர்களும் சேர்ந்து கொண்டு அந்தப் பணியை ஆற்றுவது வேறு.

சம்பந்தனையோ, கஜேந்திரகுமாரையோ, விக்னேஸ்வரனையோ சந்தித்து, வரும் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டிய விவகாரத்தில் நீங்கள் எல்லோரும் ஒரே மேசையில் இருந்து, ஒன்றுபடப் பேசி, ஒற்றைத் தீர்மானத்தை எடுத்து, தமிழர்களை இவ்விடயத்தில் ஐக்கியமாக வழி நடத்துங்கள் என்று கூறும் உரிமையும், கடமையும், பொறுப்பும் – இன்னும் விரிவாகச் சொல்வதானால் கட்டாயக் கடப்பாடும் – மதத் தலைவர்களுக்கு உண்டு.

ஆனால், அதையும் தாண்டி, தமிழ் அரசியல் தலைவர்களாகிய நீங்கள் ஒன்றுபட்டு நின்று, இந்தத் தேர்தலைப் பகிஷ்ரிக்கும்படியோ அல்லது இந்தத் தேர்தலில் இன்னாருக்கு வாக்களிக்கும் படியோ அல்லது உங்களில் ஒருவரை வேட்பாளராக நிறுத்தி அவருக்கு வாக்களிக்குமாறோ தமிழ் மக்களைக் கோர வேண்டும் என்று மதத் தலைவர்கள் இந்த சுயாதீனக் குழுவில் இடம்பெற்றபடி, தமிழ்த் தலைவர்களைக் கோருவார்களாயின், அது எல்லை தாண்டிய விடயம். மதத் தலைவர் களும் சேர்ந்து அரசியல் செய்கின்றார்கள் என்பதே அதன் அர்த்தம்.

இந்த மதத் தலைவர்களுக்கு அரசியல் உரிமைகள் உண்டு. அரசியல் வழிப்படுத்தலுக்கான தகுதி நிலை உண்டு. அதை அவர்கள் பிரயோகிப்பதும், பயன்படுத்துவதும் தப்பு என்பது அல்ல எமது நிலைப்பாடு.

அதை நீங்கள் பிரயோகிப்பதாயின், வண. அத்துரலிய தேரர் போன்றோர், வண. கலகொட அத்த ஞானசார தேரர் போன்றோர் வெளிப்படையாக நாமும் அரசியல் செய்கின்றோம் என்று அறிவித்துக் கூறிவிட்டு அதனை செய்யுங்கள்.

அதை விடுத்து, நாம் மதத் தலைவர்கள், அரசியல் செய்வது எமது நோக்கமல்ல, தமிழ் மக்கள் அரசியல் ரீதியில் ஒன்றுபட்டு நிற்குமாறு வழிப்படுத்துவதைத் தவிர எமது நோக்கம் – இலக்கு – வேறில்லை என்று கூறியபடி, நீங்கள் அரசியல் செய்ய முற்படக்கூடாது. அது சமூகத்தையும் மக்களையும் ஏமாற்றும் செயற்பாடாக அர்த்தப்படுத்தப்படக் கூடியது.

சம்பந்தனைச் சந்தித்தோம், கஜேந்திரகுமாரைச் சந்தித்தோம், விக்னேஸ்வரனைச் சந்தித்துதோம். ஒன்றுபட்டு, ஐக்கியமாக நின்று இந்தத் தேர்தலை அணுகுங்கள் என்று அவர்களுக்கு ஆலோசனை வழங்கி வழிப்படுத்தினோம் என்பதாக உங்கள் செயற்பாடு இருப்பதுதான் நல்லது.

அதை விடுத்து, அவருக்கு வாக்களியுங்கள் என்றோ அல்லது இவருக்கு வாக்களிக்காதீர்கள் என்றோ அல்லது உங்களில் ஒருவரை கேட்பாளராக நிறுத்தி அவருக்கு வாக்களியுங்கள் என்றோ தமிழர்களை கோர வேண்டும் என நீங்கள் தமிழ் தலைவர்களை கேட்பீர்களானால் அது நீங்கள் அரசியல் செய்வதாகத்தான் அர்த்தம்.

உங்களுடன் சேர்த்து வரும் பிறர் அத்தகைய கோரிக்கையை நகர்த்தினாலும் அக்குழுவில் நீங்களும் இடம்பெற்றிருப்பதால் அந்தப் பொறுப்பு உங்களையும் சாரும் என்பதையும் மறந்து விடாதீர்கள்.

# வர்த்தகர் கொலையை கண்டித்து கோண்டாவிலில் கடையடைப்பு




யாழ்ப்பாணம், ஒக். 04

வாள்வெட்டுக் கும்பலின் தாக்குதலால் உயிரிழ்ழந்த இரும்பக உரிமையாளரின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெறும் நிலையில் அவரது கொலையைக் கண்டித்தும் நீதி கோரியும் கோண்டாவில் உப்புமடப்பகுதியில் கடைகள், கல்வி நிலையங்கள் மூடப்பட்டன.

கோண்டாவில் உப்புமடச் சந்தியில் அமைந்துள்ள லக்சுமி இரும்பகத்தின் உரிமையாளர் கந்தையா கேதீஸ்வரன் (வயது – 47) என்பவரே வன்முறைக் கும்பலின் தாக்குதலில் உயிரிழுந்தார்.

இந்தச் சம்பவம் செம்ரெம்பர் 6ஆம் திகதி மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

அன்று மாலை இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த கும்பல் ஒன்று இரும்பகத்துக்குள் புகுந்து அதன் உரிமையாளரை கண்மூடித்தனமாகத் தாக்கியதுடன், இரும்பகத்துக்குள் அட்டூழியத்தில் ஈடுபட்டுவிட்டுத் தப்பித்தது.

இரும்பகத்தில் இருந்த கட்டை ஒன்றை எடுத்து உரிமையாளரின் தலையில் கும்பல் தாக்கியிருந்தது. அதனால் தலையில் படுகாயமடைந்த அவர், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில் 24 நாள்களின் பின்னர் அவர் கடந்த திங்கட்கிழமை இரவு உயிரிழந்தார்.

அவரது இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெற்றன. அவரது கொலையைக் கண்டித்தும் நீதியான விசாரணை இடம்பெறவேண்டும் என்று வலியுறுத்தியும் கோண்டாவில் உப்புமடம் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள், கல்வி நிலையம் உள்ளிட்டவை நேற்று மூடப்பட்டன. (ஐ)

# 126 பதக்கங்களை கைப்பற்றி சாதனை புரிந்த முல்லைத்தீவு





முல்லைத்தீவு, ஒக். 04

நடைபெற்று முடிந்த 13 ஆவது வடமாகாண விளையாட்டு விழாவில் முல்லைத்தீவு மாவட்டம் இரண்டாம் இடத்தைப் பெற்று சுவீகரித்துக் கொண்ட வெற்றிக் கிண்ணங்களை அரச அதிபரிடம் கையளிக்கின்ற நிகழ்வு நேற்றுமுன் தினம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

வடமாகாண மாவட்டங்களுக்கு இடையிலான 13ஆவது விளையாட்டு விழா யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெற்றது. இதில் முல்லைத்தீவு மாவட்டம் 34 தங்கப் பதக்கங்கள் 43 வெள்ளி பதக்கங்கள் 49 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 126 பதக்கங்களை கைப்பற்றி இரண்டாம் இடத்தைப் பெற்று சாதனையைப் பதிவு செய்தனர்.



பூநகரி அத்தாய் பிரதேசத்தில் பெரும்போக நெற்செய்கைக்காக நெல்விதைப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த விவசாயிகள் சிலரை வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் நேற்றுக் காலை சந்தித்து சுமூகமான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

**நாளை** 05.10.2019 சனிக்கிழமை
நட்சத்திரம்: மூலம் மு.இ 6.55 வரை
திதி : ஸப்தமி பி.ப 3.07 வரை
இராகுகாலம் : 9.02 – 10.32
சுப நேரம் : 3.02 – 4.32

# சுயேச்சையாக களமிறங்கும் குமார வெல்கம!



கொழும்பு, ஒக். 04

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி போட்டியிடாவிட்டால், எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் சுயேச்சையாகப் போட்டியிடப் போகிறார் என அந்தக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து அவர் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன போட்டியிடவேண்டும் என்றும், அவ்வாறு போட்டியிடாவிட்டால், சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்கும் அமைப்பின் சார்பாகத் தான், சுயேச்சையாகப் போட்டியிடுவோர் என்றும் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஏனைய கட்சிகளின் வேட்பாளர்களுக்கு ஆதரவு அளிக்கக் கூடாது என்பதையும் வலியுறுத்திய அவர், இன்று கட்டுப்பணம் செலுத்தப் போகிறார் எனவும் கூறியுள்ளார்.

இந்த நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஐ.தே.க. அல்லது, பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு அளிக்கும் முடிவை எடுத்தால், கட்சிக்குள் மீண்டும் பிளவு ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

# பிள்ளைக் கனியமுதம் முன்பள்ளிக்கு சரவணபவன் எம்.பி. நிதி உதவி

யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிள்ளைக் 'கனியமுதம்', முன்பள்ளிக்கு யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் நல்லூர் தொகுதிக்கான நிதி ஒதுக்கீட்டில்10 லட்சம் ரூபா பெறுமதியான உதவித்திட்டங்களை முன்பள்ளி சமூகத்தினருக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

நிகழ்வில் யாழ் மாநகரசபை உறுப்பினர்கள், முன்பள்ளி தலைமை ஆசிரியர், பொறுப்பாசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.











கொழும்பு மகளிர் இந்து மன்றம் கொழும்பு -03 அன்பு இல்லத்தில் கடந்த ஞாயிறன்று நடத்திய நவராத்திரி பூஜை நிகழ்வில் வட்டுக்கோட்டை மற்றும் பலம்பலபிடியைச் சேர்ந்த பிரபல மிருதங்க வித்துவான் சுவாமிநாதன் சர்மா வின் இசை அர்ச்சனை குழுவினரால் 'பார்வதி திருக்கல்யாணம்' எனும் தலைப்பில் கதாகாலட்சேபம் நடை பெற்றது.

இந் நிகழ்வில் செல்வன் சு. அனந்த நாராயணன் சர்மா கதாகாலட்சேபம் நிகழ்ந்த, வயலின் - வாசுகி சுவாமி நாதன் சர்மா, ஹார்மோனியம் - நந்தினி சுவாமிநாதன் சர்மா, மிருதங்கம் – பிரம்மஸ்ரீ க. சுவாமிநாதன் சர்மா, கெஞ்சிரா - சு. அரவிந்தன் சுப்பிரமணியம் சர்மா ஆகியோர் கலந்து சிறப்பித்த பதிவுகள்...



# மின் தடை

யாழ்ப்பாணம், ஒக். 04

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட் டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

திருநெல்வேலி ஒரு பகுதி, திருநெல்வேலி சந்தை பிரதேசம், திருநெல்வேலி பாற்பண்ணை பிரதேசம், இராமலிங்கம் ஆடியபாதம் வீதி சந்தி, முகாமைத்துவபீடம், தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி, சிவன் அம்மன் வீதி, கந்தர்மடம், அன்னசத்திரச் சந்தி, இலுப்பையடி சந்தி, பருத்தித்துறை வீதியில் நாக விகாரையில் இருந்து பாரதியார் சிலை வரை, விக்ரோறியார் வீதி, மின்சார நிலைய வீதியில் ஒரு பகுதி, புகையிரத நிலையப் பிரதேசம், மார்டின் வீதி, யாழ்2ம்3ம்4ம்குறுக்கு தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் புகையிரதக் கடவையிலிருந்து இராசாவின் தோட்ட வீதி வரை, அம்பலவாணர் வீதி, அன்னசத்திர வீதி, ஆஸ்பத்திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து மார்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதியில் ஆரிய குளத்திலிருந்து முட்டாசுக்கடை சந்தி வரை, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியில் ஒரு பகுதி, நொதோண் சென்றல் கொஸ்பிற்றல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆண்கள் விடுதி, டம்றோ பலாலி வீதி, ஹற்றன் நஷனல் வங்கியின பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, AVNOR பிறைவேற் லிமிற்ரெட், மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, யாழ் புகையிரத நிலையம், Green Grass விடுதி, சிறிநதியா நகை மாளிகை, Raja Talkies, LOLC, ஞானம்ஸ் விடுதி, றொப்பாஸ், சங்கானை, பண்டத்தரிப்பு, விழிசிட்டி, தொல்புரம், சுழிபுரம், கள்ளவேம்படி, வடலியடைப்பு, சில்லாலை, சாந்தை, விளான், பெரியவிளான், இளவாலை, மாரீசன்கூடல், சேந்தாங்குளம், மாதகல், காஞ்சிபுரம், ஜம்பு கோளப்பட்டிணம், குசுமாந்துறை, காட்டுபுலம், மாகியப்பிட்டி, பெருமாள்கடவை, சண்டிலிப்பாய் வைரவர் கோவிலடி, கந்தரோடை, ஆலங்குலாய் சண்டிலிப்பாய் ஆகிய இடங்களிலும் –

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

புதுக்குடியிருப்பு ஒரு பகுதி, Hydramani ஆடைத்தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்–

**வவுனியா பிரதேசத்தில் -**

சின்னத்தம்பனை, வீரபுரம், கெலசியம் பலாவ, நேரியகுளம், பெரியநொச்சிக்குளம் ஆகிய இடங்களிலும் –

**மன்னார் பிரதேசத்தில் -**

முருங்கனிலிருந்து தலைமன்னார் வரை, முருங்கனிலிருந்து சிலாவத்துறை ஊடாக முள்ளிக்குளம் வரை, முருங்கன்பிட்டியிலிருந்து நறுவிலிக்குளம் வரை, Timex ஆடைத் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, பூட்சிற்றி, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், அரசாங்க அதிபர் அலுவலகம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், Youth Crop பயிற்சி நிலையம், Palmyrah House வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் வைத்தியசாலை, தள்ளாடி இராணுவமுகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், முருங்கன் நீர்பாசன சபை, செம்மண்தீவு நீர்பாசன சபை, செம்மண்தீவு Ware House வங்காலை, தோமஸ்புரி, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்பாசன சபை, டொன் பொஸ்கோ, சிலாவத்துறை கடறப்டை முகாம், முள்ளிக்குளம் கடற்பப்டைமுகாம், முருங்கன் விதைகள் உற்பத்தி நிலையம ஆகிய இடங்களிலும் –

**மேலும், 5 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி முதல் 17.00 மணி வரை -**

யாழ் குடாநாடு முழுவதும், கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம் முழுவதும், வவுனியா மாவட்டம் முழுவதும், மன்னார் மாவட்டம் முழுவதும் ஆகிய பிரதேசங்களிலும்

– மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(மேலும் செய்திகள் படங்கள் 13 ஆம் பக்கத்தில்)

# காந்திஜியுடன் மோடியை ஒப்பிட்டு பேசிய டிரம்புக்கு போதிய அறிவு ஞானம் இல்லை

## போட்டுத் தாக்குகின்றார் சித்தராமையா

பெங்களூரு, ஒக். 04

மகாத்மா காந்தியுடன் மோடியை ஒப்பிட்டு பேசிய டிரம்புக்கு போதிய ஞானம் இல்லை என்று காங்கிரஸின் கர்நாடக மாநிலத் தலைவர் சித்தராமையா கடுமையாகத் தாக்கி பேசினார்.

மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்தநாள் விழா நேற்றுமுன்தினம் பெங்களூரு குயின்ஸ் ரோட்டில் உள்ள காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் நடந்தது. அவரது உருவப் படத்திற்கு முன்னாள் முதலமைச்சர் சித்தராமையா, மாநில தலைவர் தினேஷ் குண்டுராவ், முன்னாள் துணை முதலமைச்சர் பரமேஸ்வர் உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். பின்னர் குயின்ஸ் ரோட்டில் உள்ள காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் இருந்து சுதந்திரப் பூங்காவுக்கு காங்கிரஸ் தலைவர்கள் நல்லெண்ண நடைபயணம் மேற்கொண்டனர்.

பின்னர் சுதந்திரப் பூங்காவில் நடந்த கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் சித்தராமையா பேசியவை வருமாறு:–

மாநிலத்தில் மழை, வெள்ளத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து வீதிக்கு வந்துள்ளனர். பலர் உயிர் இழந்துள்ளனர். ஆனால் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்க மத்திய, மாநில பா.ஜனதா அரசுகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாநிலத்தில் மழை, வெள்ளத்தை பார்வையிட பிரதமர் மோடி இதுவரை வரவில்லை. நமது மாநிலம் மட்டுமின்றி, அவரது சொந்த மாநிலமான குஜராத்துக்குக் கூட சென்று மழைப் பாதிப்புகளை பிரதமர் பார்வையிடவில்லை. ஆந்திரா, தெலுங்கானா, ஒடிசா என மழை பாதித்த எந்த மாநிலத்திற்கும் பிரதமர் மோடி செல்லவில்லை.



பீகாரில் மழை பாதிப்பு ஏற்பட்டதும் டுவிட்டர் மூலம் தேவையான உதவிகள் செய்யப்படும் என்று பிரதமர் கூறுகிறார். ஏனெனில் அங்கு பா.ஜனதா கூட்டணி அரசு நடைபெறுகிறது. கர்நாடகத்தில் பா.ஜனதா ஆட்சி நடந்தாலும் நிவாரண பணிகளை மேற்கொள்ள மத்திய அரசு ஒரு ரூபா கூட இன்னும் வழங்கவில்லை. மழை பாதிப்பு உண்டாகி 50 நாள்கள் ஆகிறது. அப்படி இருந்தும் நிவாரணம் வழங்கவில்லை என்றால், மத்திய அரசு செத்து போய் விட்டது என்று நினைக்கிறேன்.

மோடி இந்த நாட்டிற்கு பிரதமராக இருப்பது ஒரு மோசமான சூழ்நிலையாகும். அவர் பிரதமராக இருப்பது துரதிர்ஷ்டவசமானது.

உள்நாட்டில் மக்கள் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண மோடியால் முடியவில்லை. வெளிநாட்டுக்கு சென்று நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். அமெரிக்க அதிபர் டிரம்ப், பிரதமர் மோடியை இந்தியாவின் தந்தை என்று கூறி இருக்கிறார். டிரம்புக்கும், மோடிக்கும் எந்த வித்தியாசமும் இருப்பதாகத் தெரியவில்லை.

மகாத்மா காந்தியைத்தான் தேச பிதா என்று கூறுகிறோம். காந்தியுடன் பிரதமரை ஒப்பிட்டு டிரம்ப் பேசி இருப்பதன் மூலம், அவருக்கு போதிய ஞானம் இல்லை என்று தெரிகிறது. காந்தியடிகள் பற்றி அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமாவிடம் கேட்டு டிரம்ப் அறிந்து கொள்ள வேண்டும். – இவ்வாறு சித்தராமையா பேசினார்.

# ‘ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை ஒழியுங்கள்’

புதுடெல்லி, ஒக். 04

ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் நாட்டுக்கும், உலகுக்கும் பெரிய ஆபத்து என உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.

மகாத்மா காந்தியின் பிறந்ததினத்தையொட்டி நேற்றுமுன்தினம் டெல்லியில் உள்துறை அமைச்சர் அமித்ஷா 500 மீற்றர் பாதயாத்திரை மேற்கொண்டார்.

முன்னதாக அவர் கூறும்போது, “காந்தி இந்தியாவின் சுதந்திரத்துக்காக பாடுபட்டமையுடன், சத்தியாகிரகத்தின் சக்தியை உலகுக்கு உணர்த்தியுள்ளார்.

தூய்மைக்கான தூதுவராகவும் காந்தி திகழ்ந்தார். சுதந்திரத்துக்கு பின்னர் அதனை ஒரு பெரிய இயக்கமாக நடத்தியது பிரதமர் மோடி மட்டுமே. ஒருமுறை



அமித்ஷா வேண்டுகோள்

பயன்படுத்தும் பிளாஸ்டிக் நாட்டுக்கும், உலகுக்கும் பெரிய ஆபத்து. அதனை மக்கள் ஒழிக்க வேண்டும்.

இதனை ஒரு பெரிய இயக்கமாக மாற்றவேண்டியது பா.ஜனதா தொண்டர்கள் மற்றும் நாட்டு மக்களின் பொறுப்பு” என்றார்.

# லண்டன் வங்கியில் இருக்கும் ரூ.300 கோடி நிதி பாகிஸ்தானுக்கு அல்ல, இந்தியாவுக்கே சொந்தம்

## பிரிட்டிஷ் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு



லண்டன்,ஒக்.04

லண்டன் வங்கியில் இருக்கும் ரூ.300 கோடி பணம் பாகிஸ்தானுக்கு அல்ல, இந்தியாவுக்கே சொந்தம் என இங்கிலாந்து நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கியிருந்தது.

பிரிட்டிஷ் இந்தியாவின் மிகப்பெரிய சமஸ்தானமாக விளங்கிய ஐதராபாத், 1948 ஆம் ஆண்டு இந்தியாவுடன் இணைந்தது. அப்போது ஐதராபாத்தை ஆண்டு வந்த நிஜாம் உஸ்மான் அலி கான், 10 லட்சத்து 7 ஆயிரத்து 940 பவுண்டு பணத்தை (தற்போதைய மதிப்பு இந்திய நாணயத்தில் சுமார் ரூ.8.70 கோடி) பாகிஸ்தானுக்கான அப்போதைய இங்கிலாந்து தூதர் ஹபிப் இப்ராகிம் ரகிம்தூலாவுக்கு கைமாற்றினார்.

இந்த பணத்தை அவர் லண்டனில் உள்ள நொட்வெஸ்ட் வங்கியில் போட்டு வைத்திருந்தார். 70 ஆண்டுகளை கடந்துள்ள நிலையில் இந்த பணம் தற்போது 35 மில்லியன் பவுண்டாக (சுமார் ரூ.300 கோடியாக) உயர்ந்துள்ளது.

இந்த நிதிக்கு இந்தியாவும், பாகிஸ்தானும் உரிமைகோரி வரும் நிலையில், லண்டனில் உள்ள நீதிமன்றில் இது தொடர்பாக வழக்கு நடந்து வந்தது.

இந்த வழக்கில் ஐதராபாத் நிஜாமின் வாரிசுகளான முகரம் ஜா (8 ஆவது நிஜாம்), அவரது சகோதரர் முபகம் ஜா ஆகியோரும் இந்தியாவுடன் இணைந்து சட்டப் போராட்டம் நடத்தி வந்தனர்.

சுமார் 10 ஆண்டுகளாக விசாரிக்கப்பட்டு வந்த இந்த வழக்கில் லண்டனில் உள்ள நீதிக்கான ராயல் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் தீர்ப்பு அளிக்கப்பட்டது. இதில் இந்தியாவுக்கு சாதகமாக நீதிபதி மார்கஸ் ஸ்மித் தீர்ப்பு வழங்கினார்.

அதாவது ஏழாவது நிஜாமுக்கு (உஸ்மான் அலிகான்) உரிமையுள்ள இந்த நிதி, அவரது வாரிசுகளான இளவரசர்கள் மற்றும் இந்தியாவுக்குச் சொந்தமானதாகும். இந்த வழக்கில் பாகிஸ்தான் வைத்த வாதங்கள் தவறானவை’ என்று நீதிபதி தனது தீர்ப்பில் கூறினார்.

முன்னதாக இந்த நிதிக்கு உரிமை கோரிய பாகிஸ்தான், அதற்கு ஆதரவாக 2 அம்சங்களை எடுத்து வைத்தது. அதாவது பாகிஸ்தானிடம் இருந்து ஆயுதங்கள் வாங்குவதற்காக இந்த நிதி அந்த நாட்டுக்கு வழங்கப்பட்டது எனவும், இந்தப் பணத்தை இந்தியாவுக்கு வெளியே வைத்திருக்கும் நோக்கில் வழங்கப்பட்டது எனவும் பாகிஸ்தான் கூறியது. ஆனால் இந்த வாதங்களை நீதிபதி நிராகரித்தார்.

இந்தத் தீர்ப்பு வரலாற்று சிறப்பு மிக்கது என நிஜாமின் வாரிசுகள் சார்பில் ஆஜராகி வந்த வக்கீல் பால் ஹெவிட் தெரிவித்தார்.

இந்த பணம் கைமாறப்பட்ட போது தனது கட்சிக்காரர் அதாவது 8 ஆவது நிஜாம் சிறுவனாக இருந்தார் எனவும், தற்போது 80 வயதை கடந்திருக்கும் அவரின் வாழ்நாளிலேயே தீர்ப்பு கிடைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது எனவும் அவர் கூறினார்.

அதேநேரம் இந்த தீர்ப்பால் பாகிஸ்தானுக்கு பெருத்த பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது. இந்த தீர்ப்பின் முழு விவரத்தையும் ஆய்வு செய்த பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவு செய்யப்படும் என பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.



# உலக போரில் பணியாற்றிய விமானம் விபத்தில் சிக்கியதில் 7 பேர் மரணம்

உலக போரில் ஈடுபட்ட விமானம் ஒன்று இப்போது பயண சமயத்தில் விபத்தில் சிக்கியதில் 7 பேர் பலியாகினர்.

அமெரிக்காவின் ஹோர்ட்போர்டு விமான நிலையத்தில் இருந்து போயிங் பி 17 ரக விமானம் ஒன்று 13 பேருடன் புறப்பட்டுச் சென்றது.

2 ஆம் உலக போரில் ஜேர்மன் படையினருக்கு எதிராகக் குண்டுகளை வீசும் பணியில் இந்த விமானம் சிறப்புடன் செயல்பட்டிருந்தது.

இந்த நிலையில், விமானம் புறப்பட்ட



ஒரு சில நிமிடங்களில் திடீரென தரையிறங்க முயற்சித்துள்ளது. இதில் விமானம் விபத்திற்குள்ளாகி பிராட்லி சர்வதேச விமானத்தில் இருந்த பராமரிப்பு மையம் ஒன்றில் மோதியது.

இந்த விபத்தில் 7 பேர் பலியாகி உள்ளனர். நிலப்பகுதியில் இருந்த ஒருவர் காயமடைந்து உள்ளார். விமானத்தில் 3 விமானிகள் மற்றும் 10பயணிகள் இருந்தனர். அவர்களது குடும்பத்தினருக்கு எனது இரங்கலை தெரிவித்து கொள்கிறேன் என ஆளுநர் லேமண்ட் கூறியுள்ளார்.

எந்நேரமும் பரபரப்புடன் காணப்படும் அந்த விமான நிலையம் இந்த விபத்தால் 3 மணிநேரம் வரை மூடப்பட்டது. பின்னர் ஒற்றை ஓடுதளம் விமான சேவைக்காக மீண்டும் திறக்கப்பட்டது.

இந்த விமானம் கடந்த 1987 ஆம் ஆண்டு பிட்ஸ்பர்க் நகரில் நடந்த விமான சாகச நிகழ்ச்சியில் விபத்தில் சிக்கியதில் பலர் காயமடைந்தனர்.

அதன் பின் சரி செய்யப்பட்டு மீண்டும் விமானம் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டு இருந்தது.

# மாலியில் தீவிரவாதிகள் கைவரிசை 25 இராணுவ வீரர்கள் உயிரிழப்பு!

மாலியில் இராணுவச் சாவடிகள் மீது தீவிரவாதிகள் நடதிய தாக்குதலில் 25 வீரர்கள் பலியாகினர்.

மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான மாலியில் அல் கொய்தா ஆதரவு பெற்ற தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். மாலியில் இராணுவ



வீரர்கள் மற்றும் பொலிஸாரைக் குறிவைத்துப் பயங்கரவாதத் தாக்குதல்களை அரங்கேற்றி வரும் இவர்கள் தற்போது அண்டை நாடான புர்கினா பாசோவிலும் காலூன்றித் தாக்குதல் நடத்தத் தொடங்கியுள்ளனர்.

இவர்களை ஒடுக்குவதில் மாலி மற்றும் புர்கினா பாசோ நாடுகளின் இராணுவப் படைகள் இணைந்து கூட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில் மாலியில் புர்கினா பாசோவின் எல்லையையொட்டி அமைந்துள்ள பவுல்கெசி மற்றும் மொன்டோரோ நகரங்களில் உள்ள இரு இராணுவச் சாவடிகளைக் குறிவைத்து தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர்.

அதனை தொடர்ந்து இராணுவ வீரர்கள் தங்களது துப்பாக்கிகளால் பயங்கரவாதிகளுக்கு தக்க பதிலடி கொடுத்தனர். இரு தரப்புக்கும் இடையே பல மணி நேரம் துப்பாக்கி சண்டை நடந்தது. இதில் 25 இராணுவ வீரர்கள் பலியாகினர். அதே சமயம் தீவிரவாதிகள் 15 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

# ஈராக்கில் ஆர்ப்பாட்டத்தில் துப்பாக்கி சூடு; ஐவர் சாவு!

ஈராக்கில் அதிகரித்து வரும் வேலை வாய்ப்பின்மை, ஊழல் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் ஆங்காங்கே போராட்டங்கள் நடந்து வருகின்றன.

பிரதமர் அடெல் அப்துல் மஹ்தி அரசுக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டம் வெடித்துள்ளது. அது வன்முறையாக மாற்றப்பட்டுள்ளது.

தலைநகர் பாக்தாத்தில் நடந்த போராட்டத்தில் வன்முறை வெடித்தது. இதையடுத்து காவல்துறையினர் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர். ஆனாலும் கூட்டம் கலையாதமையால் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.



இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 135 பேர் காயமடைந்துள்ளனர்.

இதுபோல் ஈராக்கின் தெற்கு நகரமான நசீரியாவில் நடந்த கலவரத்தில் ஒரு பொலிஸார் மற்றும் மூன்று போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டனர்.

# பெருவில் பள்ளத்தில் பஸ் கவிழ்ந்து பெரும் விபத்து; 23 பேர் பலியாகினர்

பெரு நாட்டில் பள்ளத்தில் பஸ் கவிழ்ந்து 23 பேர் பலியாகினர்.

பெரு நாட்டின் தெற்கு பகுதியில் குவிஸ்பிகாஞ்சி மாகாணத்தில் உள்ள அமேசான் மழைக்காடு நகரமான புவேர்ட்டோ மால்டோனாடோவில் இருந்து கஸ்கோ நகருக்கு பயணிகள் பஸ் ஒன்று புறப்பட்டு சென்றது.

இதில் 40 இற்கும் மேற்பட்ட பயணிகள் பயணம் செய்தனர். இந்த பஸ் கஸ்கோவில் உள்ள மலைப்பாங்கான சாலையில் சென்று கொண்டிருந்தபோது திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்தது.

இதனால் தறிகெட்டு ஓடிய பஸ் சாலையில் இருந்து 300 அடி ஆழம் கொண்ட பள்ளத்தில் தலைகுப்புற கவிழ்ந்தது. இந்த கோர விபத்தில் 23 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். மேலும் சுமார் 20 பேர் பலத்த காயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றது எனவும் தெரிகிறது. எனவே பலி எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது. விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.



# தன்னைப் பதவி நீக்க முயற்சிக்கின்றமை ஆட்சிக் கவிழ்ப்பு என்கிறார் அதிபர் டிரம்ப்

தம்மைப் பதவி நீக்க ஜனநாயகக் கட்சியினர் எடுக்கும் நடவடிக்கை ஆட்சி கவிழ்ப்புக்கு சமமானது என ஜனநாயக கட்சியினரை சாடியுள்ளார் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்.

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடக்கிறது. இதில் டிரம்பை எதிர்த்து ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிடுவார் என்ற எதிர்பார்க்கப்படும், முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பிடெனுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில், உக்ரைனில் பணியாற்றிய அவரது மகனுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அந்த நாட்டின் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை டிரம்ப் மிரட்டியுள்ளார் எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த விவகாரத்தில் டிரம்பை பதவியை விட்டு நீக்குவதற்கான விசாரணையை அமெரிக்க நாடாளுமன்றத்தில் (பிரதிநிதிகள் சபை) ஜனநாயக கட்சி தொடங்கியுள்ளது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுக்கும் டிரம்ப் ஜனநாயக கட்சியினரின் இந்த முயற்சி வேடிக்கையானது என்றும் வரலாற்று ஊழல் என்றும் ஏற்கனவே கருத்து தெரிவித்திருந்தார்.



இந்த நிலையில் ஜனநாயக கட்சியினர் தன்னை பதவியில் இருந்து நீக்க நினைப்பது மக்களின் அதிகாரத்தை பறிக்கும் ஆட்சிக் கவிழ்ப்புக்குச் சமமானது என்று டிரம்ப் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் டுவிட்டரில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:-

ஒவ்வொரு நாளும் நான் மேலும் மேலும் கற்றுக் கொள்ளும்போது, இது பதவி நீக்கும் முயற்சியல்ல, ஆட்சியை கவிழ்க்க முயலும் சதி என்ற முடிவுக்கு வந்துள்ளேன். இது மக்களின் அதிகாரத்தை பறிக்கும் நோக்கம் கொண்டது. அது மட்டும் இன்றி அவர்களின் வாக்கு, சுதந்திரங்கள், மதம், இராணுவம், எல்லைச் சுவர் மற்றும் அமெரிக்காவின் குடிமகனாக இருக்க கடவுள் கொடுத்த உரிமைகள் ஆகியவற்றையும் பறிப்பதற்கான முயற்சி இது. - இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikathir




நன்றி -கூர்மை இணையம்

# தமிழர் நலன் குறித்துப் பேசாமல் ஒற்றையாட்சி முறையை மட்டும் உறுதிப்படுத்தி நிற்கும் தேர்தல்

இலங்கை ஒற்றை ஆட்சி அரசின் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதர வளிப்பது என்பது தொடர்பான நிலைப்பாடுகள், கருத்துக்களில் பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் மத்தியிலும் ஏனைய சிங்கள அரசியல் பிரதிநிதி களிடமும் குழப்பங்கள், முரண்பாடுகள் நீடித்துச் செல்கின்றன. இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டால் மாத்திரமே சிங்கள அரசியல் கட்சிகள் நிம்மதியாக அரசியலில் ஈடுபடலாமென்ற நிலை மாறித் தற்போது தமது கட்சிப் பிரச்சினைகளை மாத்திரமே சிங்கள ஆட்சியாளர்கள் முக்கியப்படுத்தி வருகின்றனர் என் பதையே சமீபகாலச் செயற்பாடுகள் கோடிட்டுகாட்டு கின்றன. சஜித் பிரேமதாஸ வேட்பாளராகப் போட்டி யிடுவதால் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள், கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் பலரிடையே அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அதிருப்தியடைந்திருக்கும் உறுப் பினர்களைத் தங்கள் பக்கம் ஈர்க்கும் முயற்சியில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்காப் பொதுஜனப் பெரமுனக் கட்சி முற்பட்டு வருகிறது.

இலங்கை ஒற்றையாட்சி அரசின் ஜனாதிபதித் தேர்தலாக இருந்தாலும், தமிழர் ஒருவர் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டு ஈழத் தமிழர்கள் அனை வரும் அவருக்கு வாக்களிக்க வேண்டும். அதன்மூலம் வடக்குக் – கிழக்கு மக்கள் ஒரு தேசம் என்பதையும் தேசத்துக்கான அங்கீகாரத்தையும் சர்வதேச அரங்கில் நிறுவ முடியும்

அதேவேளை, சஜித் பிரேமதாச வெற்றிபெற வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப் பினர்கள் பலர் விரும்புகின்றனர். ஆனால் வெளிப் படையாகக் கருத்துக்கூற மறுக்கின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையி லான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆத ரவளிக்க விரும்பவில்லை. ஏனெனில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற பழம் பெரும் கட்சியை உடைத்து அம்பாந்தோட்டையைச் சேர்ந்த ராஜபக்ஷ குடும்பத்தினரால் ஸ்ரீலங்காப் பொதுஜனப் பெரமுனக் கட்சி உருவாக்கப்பட்டு அந்தக் கட்சியை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிடுகிறார்.

இதனால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் ஆத்திரமடைந்துள்ளனர். குறிப்பாக கட்சியின் ஸ்தாபக உறுப்பினர் எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்காவின் மகள், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, இந்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைக்கு சஜித் பிரேமதாஸ வெற்றிபெற வேண்டு மென்றே பிராத்திக்கிறார் போலும்.

ஏனெனில் வெற்றிபெற்று ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைத்தால் அடுத்த ஐந்து ஆண்டுகளில் எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீளப் புதுப்பிக்கலாம் எனவும் மகிந்த ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களைத் தவிர்த்து அவருடன் சேர்ந்திருக்கும் ஏனைய உறுப்பினர்களை மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இணைப்பதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கலாமென்றும் சந்திரிகா கருதுகிறார்.

ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலை பற்றிய பேச்சுகள் அதற்கான முக்கியத்துவங்கள் குறைக் கப்பட்டு, பௌத்த தேசியத்தை மையமாகக் கொண்ட இலங்கை ஒற்றையாட்சி அரசை யார் நெறிப்படுத் துவது என்ற போட்டியே நவம்பர் மாதம் 16 ஆம் திகதி நடை பெறவுள்ளது

ஆனால் தற்போது சுதந்திரக் கட்சியின் தலை வராகப் பதவி வகிக்கும் ஜனாதிபதி மைத்திரிபல சிறிசேன, ஸ்ரீலங்காப் பொதுஜனப் பெரமுனக் கட்சியின் வேட்பாளர் கோட் டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப்பதற்கான பேச்சுக்களில் ஈடுபடுகின்றார்.

எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பி னர்கள் பலர் சந்திரிகாவின் நிலைப்பாட்டோடு இருப்ப



தால், அனேகமாக சஜித் பிரேமதமாஸ வெற்றி பெற வேண்டும் என்ற கருத்தை மைத்திரிபால சிறிசேன ஏற்கக் கூடும்.

யாருக்கு ஆதரவளிப்பதென்ற முடிவு எதிர்வரும் சனிக்கிழமை அறிவிக்கப் படுமென கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர கடந்த புதன் கிழமை கொழும்பில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

அதேவேளை, சஜித் பிரேமதாஸவை விரும்பாத ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் சரத்பொன்சேகாவை தங்கள் பக்கம் எடுக்கும் முயற்சியில் ஸ்ரீலங்காப் பொது ஜனப் பெரமுனக் கட்சி ஈடுபட்டுள்ளது. கோட் டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க சரத் பொன்சேகா முன்வர வேண்டுமென கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிசர பெரேரா அழைப்பு விடுத்துள்ளார். அதேபோன்று ஏனயை உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் இராணுவத் தளபதி யாகப் பதவி வகித்து கடந்த ஓகஸ்ட் மாதம் ஓய்வு பெற்ற மகேஷ் சேனநாயக்கா தேசிய மக்கள் சக்தி இயக்கத்தின் சார்பில் தேர்தலில் போட்டியிடுகிறார். கோட்டாபய ராஜபக்ஷ வுக்கு எதிராகவே இவர் கள மிறக்கப்பட்டுள்ளார் என்ற கருத்துக்களும் இல் லாமில்லை.

தேர்தலில் போட்டியிட இதுவரை 17பேர் இலங்கைத் தேர்தல்கள் திணைக்களத்தில் கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளனர். ஆகவே இம்முறை அதி களவானோர் தேர்தலில் போட்டியிடக் கூடுமென தேர்தல்கள் திணைக்களத் தகவல்கள் தெரிவிக் கின்றன. பிரதான கட்சி வேட்பாளர்களை விழுத்தும் நோக்குடனேயே இத்தனை வேட்பாளர்கள் களமிறக்கப்படுகின்றனர் என்பது கண்கூடு.

பிரதான சிங்கள அரசியல் கட்சிகளின் வேட்பா ளர்கள் மீது வடக்குக் – கிழக்குத் தாயக மக்களுக்குக் கடுமையான அதிருப்தியும் நம்பிக்கையீனமும் ஏற்பட்டுள்ளது. இதனால் இம்முறை வாக்களிக்கமால் தவிர்க்கலாம் அல்லது வாக்களித்து அனைத்து வேட்பாளர்களையும் நிரா கரிக்கும் சூழல் உருவா கியுள்ளதெனலாம்.

குறிப்பாக அழிவு நோக்கிச் செல்லும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மீட்டெடுக்க வேண்டுமென சந்தி ரிகாவும், சஜித் பிரேமதாஸவை தோல்வியடைச் செய்து ஐக்கிய தேசியக் கட்சியை தொடர்ந்தும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டுமென ரணில் விக்கிரமசிங்கவும் முற்படுகின்றனர்.

இதன் பின்னணியிலேயே அதிகளவு வேட் பாளர்கள் மறைமுகமாக வெவ்வேறு அமைப் புகளின் பெயர்களில் களமிறக்கப்பட்டு செயற் கையான அரசியல் நெருக்கடி நிலைமை ஒன்றைத் தோற்றுவிக்க முற்படுகின்றனர். எந்தக் கட்சி, எந்த வேட்பாளர் பௌத்த சிங்கள மக்களின் நன்மதிப்பை பெறுவது என்பதே இங்கு பிரதான பிரச்சினை. தவிர வேறெந்தப் பிரச்சினைகள் பற்றியும் சிங்கள ஆட்சியாளர்கள் அக்கறைப் படுவர்களாக இல்லை.

இந்தப் பின்புலத்தை அறிந்துகொண்டுதான் அமெரிக்கா போன்ற மேற்கத்தைய நாடுகளும் இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளும் இலங்கை தொடர்பான தமது அணுகு முறைக ளைக் கையாளுகின்றனர்.

ஈழத் தமிழர் அரசியல் விடுதலை பற்றிய விவ காரத்தையும் இலங்கை ஒற்றையாட்சிக் கட்ட மைப்போடு சேர்த்து நோக்குகின்றன.

தமது பூகோள அரசியல், பொருளாதார நலன் களுக்குச் சாதகமான முறையில் இந்த நாடுகள், ஜனாதிபதித் தேர்தலுக்கு ஏதோவொரு வழியில் யாரோ ஒரு வேட்பாளருக்கு அல்லது கட்சிக்கு ஒத்து ழைப்புச் செய்கின்றமையும் வெளிப்படையாகவே தெரிகிறது.

இவ்வாறானதொரு நிலையில் பிரதான சிங்கள அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் மீது வடக்குக் – கிழக்குத் தாயக மக்களுக்குக் கடுமையான அதி



ருப்தியும் நம்பிக்கையீனமும் ஏற்பட்டுள்ளது. இதனால் இம்முறை வாக்களிக்காமல் தவிர்க்கலாம் அல்லது வாக்களித்து அனைத்து வேட்பாளர்களை யும் நிராகரிக்கும் சூழல் உருவாகியுள்ளதென்றும் கூற முடியும்.

2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்னரான சூழலில் பூகோள அரசியல் தாக்கத்துக்கு இலங்கைத் தீவு உட்படவில்லை என்பதை சிங்கள ஆட்சியாளர் கள் அறியாதவர்கள் அல்லர். ஏனைய சிங்கள அரசியல் கட்சிகளுக்கும் இந்த நிலைமை புரியும்.

இலங்கை ஒற்றையாட்சி அரசின் ஜனாதிபதித் தேர்தல் பயனற்றது என்று தெரிந்தும், 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு விரும்பியோ விரும்பாமலோ ஈழத் தமிழர்களில் அதிகமானவர்கள் வாக்களித்தனர்.

ஆனால் எதுவுமே நடக்காத ஒரு சூழலில் சிங்கள ஆட்சியாளர்கள் மீதான நம்பிக்கையீனங்கள் மே லும் அதிகரித்துள்ளன. அத்துடன் கொழும்பை மையமாகக் கொண்ட சிங்கள கட்சிகள் தமக்குள் மோதுப்பட்டுப் பிளவுபடும் அரசியல் பிரச்சினைகளே ஊடங்களில் முக்கியம் பெறுவதும் ஈழத் தமிழ் மக் களுக்கு வெறுப்பையும் சலிப்பையும் ஏற்படுத்தி யுள்ளன.

எனவே கட்சி அரசியல் வேறுபாடுகளுக்கு அப் பால் தேசிய இயக்கம் ஒன்றைக் கட்டியெழுப்பி ஜன நாயக முறையில் ஈழத் தமிழர்களை ஒருங்கிணைக் கும் வேலைத் திட்டங்களை சிவில் அமைப்புகள் முன்னெடுக்க வேண்டும்.

அதேவேளை, 2009 ஆம் ஆண்டு மே மாதத் தின் பின்னரான அரசியல் சூழலில் பிரதான சிங்கள அரசியல் கட்சிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள குழப் பங்கள், முரண்பாடுகள் போன்றவற்றுக்கு காரணம் என்ன என்பதை தெரிந்தும் தெரியாதவர்களாக சிங்கள ஆட்சியாளர்கள் செயற்படுகின்றனர். *

# 'தில்' இருந்தால் சஜித்துடன் ஜனநாயகமாக மோதுங்கள்!

## ராஜபக்ஷாக்களுக்கு வேலுகுமார் எம்.பி. சவால்

கொழும்பு, ஒக். 04

ஜனாதிபதி தேர்தலில் சஜத் பிரேமதாஸ வெற்றி நடைபோடுவார் என்பது உறுதியாகியுள்ள நிலையில் அவருக்கு எதிராக சேறுபூசும் நடவடிக்கையில் மஹிந்தவும், அவரின் சகாக்களும் தீவிரமாக இறங்கியுள்ளனர். எனவே,குறுக்குவழியில் கோழைத்தனமாக அரசியல் நடத்துவதைவிடுத்து 'தில்' இருந்தால் சஜித்துடன் ஜனநாயக வழியில் நேருக்கு நேர் மோதுமாறு அவர்களுக்கு சவால் விடுக்கின்றேன்.

– இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி மாவட்ட அரசியல் செயற்பாட்டாளர்களுடன் கொழும்பில் நேற்றுக் காலை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் தொடர்பான கலந்துரையாடலில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தல் வந்துவிட்டால்போதும் மஹிந்தவுக்கும் அவரை சூழவுள்ளவர்களுக்கும் 'இனவாத' காய்ச்சல் ஏற்பட்டுவிடுகின்றது. இதுவரைகாலமும் இனவாதிகளுக்குப் பாலூட்டி அவர்களை மறைமுகமாக இயக்கிய கோட்டாபய ராஜபக்ஷவும் தற்போது அந்த அணியில் இணைந்து அரசியலுக்கு வந்துள்ளார். இவர்களுக்கு மட்டுமே தேசப்பற்று இருப்பதாக எண்ணி சந்து, பொந்தெல்லாம் அது பற்றியே கூவித்திரிகின்றனர்.

மக்கள் மத்தியில் தற்போது நேர்வழியில் பிரசாரம் செய்யமுடியாத அளவுக்கு தமது ஆட்சியின்போது கொலை, கொள்ளைகளை அரங்கேற்றிய ராஜபக்ஷாக்களும், அவர்களின் சகாக்களும் வேறுவழியின்றியே வழமைபோல் இனவாத ஆயுதத்தை கையிலெடுத்துள்ளனர். தேசப்பற்றை முன்னிலைப்படுத்தி கறைபடிந்த தமது கடந்தகாலப் பயணத்தை மூடி மறைக்க முற்படுகின்றனர்.

சஜித் பிரேமதாஸவுக்கும், எங்களுக்கும் ராஜபக்ஷாக்களைவிட – நாம் பிறந்து, தவழ்ந்து, வளர்ந்து, வாழ்ந்து, செத்துமடியபோகும் தாய்நாடுமீது அதிக பற்று இருக்கின்றது. ஆனால், அரசியலுக்காக ஒருபோதும் தாய்நாடுமீதான பற்றை அடகுவைத்து வாக்குவேட்டை நடத்தியது கிடையாது. உணர்வுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை சந்தைப்படுத்த முற்படுபவன் உண்மையான தேசப்பற்றாளன் கிடையாது என்பது தற்போது மக்களுக்கும் புரிந்துவிட்டது.

பழமையான விடயங்களில் நாட்டுக்கு தேவையானவற்றை பாதுகாத்து அதேபோல் புதுமைகளுக்குஇடமளித்துபுத்துணர்ச்சியுடன் புதுயுகம் நோக்கி பயணிப்பதே சஜித் பிரேமதாஸவின் அரசியல் இலக்காக இருக்கின்றது. இது தொடர்பில் எமக்கு அவர் தெளிவு படுத்தியுள்ளார். அன்று தொட்டு இன்று வரை பிரதான கட்சிகள் நடத்திவரும் பாரம் பரிய அரசியலுக்கு அப்பால் நவயுகத்துடன் ஒப்பிட்டு சிந்தித்து முடிவெடுக்ககூடிய வல்லமை சஜித்துக்கு இருக்கின்றது.

இதனால்தான் அவரின் கரங்களை பலப்படுத்த நாம் ஆதரவு வழங்கியுள்ளோம்.

எனவே, சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காக நாம் அனைவரும் தீவிரமாகச் செயற்படவேண்டியுள்ளது. அவரின் வெற்றியில்தான் நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளதால் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வாக்களார்களுக்கும் கூடுதல் பொறுப்பு இருக்கின்றது என்றே நான் கருதுகின்றேன்.

எனவே, மஹிந்த தரப்பின் மாயாஜால அரசியலுக்கு மயங்காமல் உண்மை எது, பிழை எது என்பதை பகுத்தறிந்து முடிவுகளை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன் – என்றார். (ஐ)





யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இன்ரறக்ட் கழகத்தினால் வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் "ஒரு துளி உயிர் தரும்" இரத்த தான நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை கல்லூரியின் நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் உட்பட பெருமளவானோர் உயிர் காக்கும் உன்னத பணியில் இணைந்திருந்தனர்.

## அகதிகள் தடுப்பு முகாமில் உள்ள தமிழ்க் குடும்பத்தை விடுவிக்குமாறு ஆஸி அரசை வற்புறுத்துகின்றது ஐ.நா.




ஜெனீவா,ஒக்.04

அகதிகள் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ள தமிழ் குடும்பத்தை அடுத்த 30நாள்களுக்குள் விடுவிக்க வேண்டும் என ஆஸ்திரேலியாவை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த தம்பதி நடேசலிங்கம் – பிரியா. இவர்களில் பிரியா 2012 ஆம் ஆண்டிலும், நடேசலிங்கம் 2013 ஆம் ஆண்டிலும் புகலிடம் தேடி படகு மூலம் ஆஸ்திரேலியா சென்றனர்.

ஆனால் ஆஸ்திரேலிய அரசு அவர்களை அகதிகளாக ஏற்றுக்கொள்ளவில்லை. இதற்கிடையே, ஆஸ்திரேலியாவில் நடேசலிங்கம் – பிரியா தம்பதிக்கு கோபிகா, தருணிகா என இரு மகள்கள் பிறந்தனர். தற்போது கோபிகாவுக்கு 4 வயதும், தருணிகாவுக்கு 2 வயதும் ஆகின்றன.

இந்த நிலையில், நடேசலிங்கம் குடும்பத்தினரை இலங்கைக்கு நாடு கடத்த ஆஸ்திரேலிய அரசு உத்தரவிட்டது. அதன்படி கடந்த ஓகஸ்ட் மாதம் இவர்கள் நாடு கடத்தப்பட விமானத்தில் ஏற்றப்பட்டு விமானம் ஆஸ்திரேலியாவில் இருந்து புறப்பட்டது. பாதி வழியில் விமானம்சென்றுகொண்டிருந்த போது ஆஸ்திரேலிய நீதிபதி, இவர்களது நாடு கடத்தும் உத்தரவுக்கு இடைக் காலத் தடை விதித்தார்.

இதனால் பாதி வழியில் விமானம் மீண்டும்திருப்பப்பட்டு ஆஸ்திரேலியா கொண்டுவரப்பட்டது.

அதன்பிறகு அவர்கள் 4 பேரும் கிறிஸ்துமஸ் தீவில் உள்ளதடுப்புமுகாமில்தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நடேசலிங்கம் குடும்பத்தினருக்காக ஆஸ்திரேலியாவில் சட்ட போராட்டம்நடத்திவரும்பெண் சட்டத்தரணி கரினா போர்டு என்பவர், ஜெனீவாவில்உள்ள ஐ.நா. மனித உரிமைகள் குழுவில் ஒரு மனுவைத் தாக்கல் செய்தார்.

அதனை ஆராய்ந்த ஐ.நா. மனித உரிமைகள் குழு, 30 நாள்களுக்குள் நடேசலிங்கம் – பிரியா குடும்பத்தைத் தடுப்பு முகாமில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று ஆஸ்திரேலிய அரசுக்கு கடிதம் அனுப்பிவலியுறுத்திஉள்ளது.

northern PC Park
வடக்கின் கணினிப் பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskada Junction Stanly Road, Jaffna
தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co
Northern Pc Park 0777570124 0215675566
NPcpark 0773366443 0212229581
northernpcpark 0766999597 0212222050
Northern Pc Park 0717772377 0212220388

# கோஹ்லியின் தீவிர ரசிகர்

தனது ஜெர்சியை உடலில் பச்சைக் குத்திய ரசிகரை நேரில் அழைத்து கட்டித் தழுவி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார் விராட் கோஹ்லி.

இந்தியா – தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி விசாகப் பட்டினத்தில் நேற்று முன் தினம் தொடங்கியது. தேனீர் இடைவேளைக்குப் பிறகு முதல் நாள் ஆட்டம் நடைபெறவில்லை.

அப்போது இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி ரசிகர் ஒருவரை சந்தித்தார். கோக்லியின் ஜெர்சியை தனது உடலில் பச்சை குத்தியிருந்த அவர் கோஹ்லியினதும் ஊடகங்களினதும் கவனத்தை வெகுவாக ஈர்த்தார்.







# உடுத்துறை செந்தமிழ் வெற்றி

பருத்தித்துறை லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா வி.க. பருத்தித்துறை, வடமராட்சி லீக்கின் அங்கத்துவ கழகங்களுக்கிடையில் நடத்தி வரும் உதைந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் உடுத்துறை செந்தமிழ் அணியை எதிர்த்து கலட்டி ஜக்கியம் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 04:00 என்ற கோல் கணக்கில் செந்தமிழ் அணி வெற்றி பெற்றது.

செந்தமிழ் அணி சார்பாக அகி 02 , யூட், தில்சான் ஆகியோர் தலா ஒரு கோலை பெற்றுக் கொடுத்தனர்.



# இறுதிச் சமர் நாளை!

நடப்பாண்டுக்கான வடக்கு – கிழக்கு பிறீமியர் லீக் தொடரின் மாபெரும் இறுதி சமர் நாளை சனிக்கிழமை இரவு 07. 00 மணியளவில் யாழ் துரையப்பா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இறுதிப் போட்டியில் தனேஸ் தலைமையிலான நடப்புச் சம்பியன் ரில்கோ கொங்கியூரஸ் அணியை எதிர்த்து ஞானரூபன் தலைமையிலான வல்வை எவ்.சி அணி மோதவுள்ளது.

பெருந்திரளான ரசிகர்கள் மத்தியில் இப் போட்டி இடம் பெறும் என எதிர் பார்க்கப்படுவதோடு, ரசிகர்களுக்கு விருந்து படைக்க கூடிய ஆட்டமாக இந்த ஆட்டம் அமையும் என எதிர்பாக்கப்படுகிறது.

கடந்த இரண்டு மாதங்களாக நடைபெற்று வந்த இந்தச் சுற்றுப்போட்டியில் வட, கிழக்கைச் சேர்ந்த மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தி 12 அணிகள் களமிறங்கியிருத்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.




# யாழ்.போதனா வைத்தியசாலை அணி கிரிக்கெட்டில் சம்பியன்

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் ஊழியர் நலன்புரி சங்கம் மற்றும் விளையாட்டுக்கழகம் இணைந்து நடத்தியமென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியில் யாழ்.போதனா வைத்தியசாலை அணி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களங்கள் மற்றும் யாழ் மாவட்ட அரச நிறுவனங்களைச் சேர்ந்த 29 அணிகள் இதில் பங்குபற்றியிருந்தன. இப் போட்டிகள் இம்மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகி வார இறுதி நாள்களில் நடைபெற்று வந்தன. அதன் இறுதிப் போட்டி கடந்த 29ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் யாழ். போதனா வைத்தியசாலை அணி மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை அணி ஆகியன போட்டியிட்டன. அதில் யாழ்.போதனா வைத்தியசாலை அணி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது. போட்டியின் பிரதம விருந்தினராக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவர்கள் கலந்துகொண்டு வெற்றிக் கிண்ணம் மற்றும் பணப்பரிசினையும் வழங்கி கௌரவித்தார்.



# அபார வெற்றி பெற்ற வதிரி டயமன்ஸ் அணி

பருத்தித்துறை லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா வி.க. பருத்தித்துறை, வடமராட்சி லீக்கின் அங்கத்துவ கழகங்களுக்கிடையில் நடத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் வதிரி டைமன்ஸ் அணியை எதிர்த்து சிறீ அம்பாள் அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் 05:00 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் அணி வெற்றி பெற்றது.

டயமன்ஸ் அணி சார்பாக பீமா 02 , பீரதீபன் 02 , லக்கீசன் ஒரு கோலைப் பெற்று கொடுத்தனர்.





# ஆஸி. வீராங்கனை புதிய சாதனை!

இலங்கை மகளிர் அணிக்கும், ஆஸ்திரேலிய மகளிர் அணிக்கும் இடையிலான மூன்றாவது 20/20 போட்டியில் ஆஸ்திரேலிய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீராங்கனையான அலிசா ஹீலி புதிய சாதனை ஒன்றைப் படைத்துள்ளார்.

இந்தப் போட்டியின் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 2 விக்கெட் இழப்பிற்கு 226 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

ஆஸ்திரேலிய அணி சார்பில் ஆரம்ப துடுப்பாட்ட வீராங்கனையான அலிசா ஹீலி ஆட்டமிழக்காமல் 61 பந்துகளில் 148 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

இதுவே 20/20 வரலாற்றில் தனிநபர் ஒருவர் இன்னிங்ஸ் ஒன்றில் பெற்றுக்கொண்ட அதிகூடிய ஓட்டங்கள் ஆகும்.(ஐ)

# சிவபூமியின் வாணி விழா

கோண்டாவில், ஒக்.04

கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் வாணிவிழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சிவபூமி பாடசாலை மண்டபத்தில் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர ஞான நம்பந்த பரமாசாரியர் ஆசியுரை வழங்குவார். யாழ். மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் தம்பதிகள் பிரதம விருந்தினராகவும், சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி. அ.ஜெயக்குமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளைத் தொடந்து மதிய போசனமும் வழங்கப்படும் அனைவரையும் வருகை தந்து மாணவர்களை ஆசீர்வதிக்குமாறு சிவ பூமி குடும்பம் வேண்டுகோள் விடுத்துள்ளது.











கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த பிரமந்தனாறு கிராமமக்களும், அப்பிரதேச மாணவர்களும் உள்ளூர் வீதிகளை புனரமைக்கக் கோரி நேற்று முன்தினம் காலை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற் கொண்டனர்.

# ஐ.தே.க. மாநாட்டில் ஆறு யோசனைகள்!

கொழும்பு, ஒக். 04

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன் னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவைக் களமிறக்குவதற்கு கட்சி மத்திய செயற்குழு எடுத்த முடிவுக்குக் கட்சி யின் சம்மேளனம் நேற்று ஏகமனதாக அங்கீகாரம் வழங்கி யது.

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட சம்மேளனம் கட்சி தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு – சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபெற்றது.


இதன்போதே சஜித்தின் பெயரை முன்மொழிந்து, அனுமதியை கோரினார் கட்சித் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. இதற்கு ஏகமனதாக அங்கீகாரம் கிடைத்தது.

1.அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல், தேர்தல் முறைமையில் சீர்திருத்தம் செய்தல், பிரதமரின் இணக்கப்பாட்டுடன் அமுலாகும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி போன்ற ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட அரசமைப்பு மறுசீரமைப்பு தொடர்ந்தும் முன்னெடுத்தல்.

2.கட்சித் தலைவர் பதவிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நியமிப்பதற்கு கட்சி செயற்குழு எடுத்த தீர்மானத்தை கட்சி மாநாடு மீண்டும் உறுதி செய்கின்றது.

என்பன உட்பட 6 யோசனைகள் ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

முதலாவது பிரேரணையைக் கட்சி தலைவர் முன்மொழிந்தார். அதனை தேசியப்பட்டியல் எம்.பி. சுவாமிநாதன்



வழிமொழிந்தார்.

ஏனையவற்றை கட்சி பொதுச்செயலாளர் முன்மொழிய, அவற்றை சுவாமிநாதன் வழிமொழிந்தார். (ஐ)

## கொழும்பு பாடசாலைகளுக்கு விடுமுறை

கொழும்பு, ஒக். 04

பொரளை, கொழும்பு தெற்கு மற்றும் ராஜகிரிய ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு எதிர்வரும் 7 ஆம் திகதி விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யும் தினமென்பதால், இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழு அமைந்துள்ள பகுதியில் உள்ள படசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.



# சின்னத்தை மாற்ற முடியுமா? மௌனம் சாதித்த தேசப்பிரிய

கொழும்பு, ஒக். 04

ஒரு வேட்பாளர் சார்பாக ஒரு சின்னத்தில் போட்டியிடுவதற்கு கட்டுப்பணம் செலுத்தப்பட்ட பின்னர், அவர் சின்னத்தை மாற்ற முடியுமா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மௌனம் சாதித்தார்.

நாளை சனிக்கிழமை பொதுவிடுமுறை என்பதால், ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எனினும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணிவரை வேட்பாளர்கள் சார்பில் கட்டுப்பணம் செலுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

ஒரு வேட்பாளர் சார்பாக ஒரு சின்னத்தில் போட்டியிடுவதற்கு கட்டுப்பணம் செலுத்தப்பட்ட பின்னர், அவர் சின்னத்தை மாற்ற முடியுமா என்றும், இரண்டாவது முறையாக இன்னொரு சின்னத்தில் போட்டியிடக் கட்டுப்பணம் செலுத்த முடியுமா என்றும் தேர்தல்கள் ஆணையாளரிடம் கேள்வி எழுப்பப்பட்டபோது அதற்கு கருத்து எதையும் வெளியிட அவர் மறுத்துள்ளார்.



அந்த விவகாரம் பற்றி தேர்தல் ஆணைக்குழு கரிசனை கொள்ளவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# வேட்பாளர்கள் 20 பேர் இதுவரை கட்டுப்பணம்

கொழும்பு, ஒக். 04

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்குக் கட்டுப்பணம் செலுத்தியுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மூன்று பேர் தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணம் செலுத்தினர்.

ஸ்ரீலங்கா தொழிற்கட்சி சார்பாக ஏ.எஸ்.பி. லியனகேயும், சுயேச்சை வேட்பாளர்களாகப் போட்டியிடுவதற்கு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சமரவீர வீரவன்னி மற்றும் அசோக வடிகமங்காவ ஆகியோரும் நேற்று முன்தினம் கட்டுப்பணத்தைச் செலுத்தினர்.

இதுவரை 20 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். அவர்களில் 10 பேர் அரசியல் கட்சிகளின் சார்பிலும், 10 பேர் சுயேச்சையாகவும் போட்டியிடவுள்ளனர்.

ஐ.தே.க. வேட்பாளர் சஜித் பிரேமதாஸ சார்பில் இன்னமும் கட்டுப்பணம் செலுத்தப்படவில்லை.

எதிர்வரும் 6ஆம் திகதி மதியம் 12 மணி வரை கட்டுப்பணம் செலுத்தக் கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சிங்கப்பூர் செல்ல கோட்டாவுக்கு அனுமதி வழங்கியது நீதிமன்றம்



கொழும்பு, ஒக். 04

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 9ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை சிங்கப்பூருக்குப் பயணம் மேற்கொள்வதற்குச் சிறப்பு மேல்நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

டி.ஏ. ராஜபக்ஷ நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டதில் இடம்பெற்ற முறைகேடு தொடர்பான வழக்கில், கோட்டாபய ராஜபக்ஷவின் கடவுச்சீட்டு முடக்கி வைக்கப்பட்டு, அவர் வெளிநாடு செல்வதற்கு சிறப்பு நீதிமன்றம் தடை விதித்திருந்தது.

இந்த நிலையில், மருத்துவப் பரிசோதனைகளுக்காக எதிர்வரும் 9ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை சிங்கப்பூருக்குச் சென்று வருவதற்கு அனுமதி அளிக்கக்கோரியும், கடவுச்சீட்டை விடுவிக்க உத்தரவிடக் கோரியும் கோட்டாபய ராஜபக்ஷ சிறப்பு மேல்நீதிமன்றில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்றம், 9ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை கோட்டாபய ராஜபக்ஷவுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத் தடையை நீக்கியுள்ளதுடன் கடவுச்சீட்டை விடுவிக்குமாறும் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

# ஈஸ்டர் தாக்குதலுக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கை பூர்த்தி

கொழும்பு, ஒக். 04

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற தாக்குதலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கை பூர்த்தி அடைந்திருப்பதாக இழப்பீட்டிற்கான காரியாலயம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் காயமடைந்தவர்கள் என 707 பேருக்கான இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளமையுடன் இதற்காக சுமார் 30 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளான ஆயித்து 142 பேருக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதுடன் இதற்காக 17 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. அத்துடன் மேலும் 750 பேருக்கு இழப்பீடு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பொலிஸாருக்கு டிமிக்கி கொடுத்து தப்பினார் ஹெரோய்ன் சந்தேகநபர்

யாழ்ப்பாணம், ஒக். 04

ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர், பொலிஸாருக்கு தண்ணி காட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

தடுப்புக்காவல் சந்தேகநபர் தப்பித்ததையடுத்து ரிசேவ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டமையுடன், யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்பும் நேற்றுப் புதன்கிழமை அதிகரிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் கடந்த திங்கட்கிழமை முன்னெடுத்த சுற்றுக்காவல் நடவடிக்கையின்போது ஓட்டுமடம் – பொம்மைவெளிப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் 25 மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் விசாரணைகளின் பின்னர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டார்.

யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்படுத்துவதற்காகச் சந்தேகநபர் பொலிஸ் நிலையச் சிறைக் கூடத்தில் தடுத்துவைக்கப்பட்டார். எனினும் அவர் சில மணி நேரங்களில் காணாமற்போனார்.

அதனையடுத்து பொலிஸ் நிலைய சி.சி.ரி.வி. கமராக்களின் பதிவுகளைச் சோதனையிட்டபோது, சிறைக்கூடத்தின் பூட்டு சரிவரப் பூட்டப்படாமல் இருந்தமையும் அதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய சந்தேகநபர், சிறைக் கூடத்தைத் திறந்து சாதாரணமாக முன்வாயில் ஊடாக வெளியேறிச் செல்கின்றமையும் தெரியவந்தது.

அதனையடுத்து சந்தேகநபரைத் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டனர். எனினும் அவர் தலைமறைவாகியதால் பொலிஸாரின் முயற்சி தோல்வியடைந்தது.

இந்த நிலையில் ரிசேவ் பொலிஸில் கடமையிலிருந்த உத்தியோகத்தர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் பணி இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

அத்துடன், யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பிரதான வாயில் படலை மூடப்பட்டு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் விழிப்பு நிலையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

மேலும் பொலிஸ் நிலையத்துக்குள் பொதுமக்கள் எழுந்து நடமாடுவதற்கு தடை விதிக்கப்பட்டு பாதுகாப்பு இறுக்கப்பட்டுள்ளது. (ஐ)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.10.2019 இல் வெளியிடப்பெற்றது.